உ

# கும்பகோண சரித்திரம்.



வி. இராமகிருஷ்ணசாஸ்திரி பி. ஏ., எல். டி.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்,
கும்பகோணம்.

1924.

3 -OCT 1

உ

# கும்பகோண சரித்திரம்.

இது

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில்

சரித்திரபோதகாசிரியராகிய

வி. இராமகிருஷ்ண சாஸ்திரி பி. ஏ., எல். டி.

அவர்களால் இயற்றப்பட்டது.

---

கும்பகோணம் ரேஞ்ஜ்

டெப்புடி இன்ஸ்பெக்டரான

ஸ்ரீயுத் ப. கி. பட்டாபிராமசாஸ்திரி பி.ஏ.,எல்.டி.,

அவர்களுடைய முகவுரையுடன் கூடியது.

---


கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.


---

(காபிரைட்)

1924.

[அணா 8.

V21193K
N24
85564

உ

# உரிமை யுரை.

இச் சிறு புத்தகம்

ஸ்ரீமான்

வித்யா பிரசார ப்ரவீண,

குலபதி,

ராவ் பஹதூர்,

அப்புசாஸ்திரிகளவர்களுக்கு

அர்ப்பணஞ்செய்யப்பட்டது.

85564

# INTRODUCTION.

It has been a crying defect of the present day education that while the students grind away at silly details regarding distant foreign countries–their history and geography–theybetray appalling ignorance of things at their very doors. Frequent conferences of the educationists of this district met sometime ago under the presidency of M.R.Ry. **C. D. Subramanya Chettiar Avl.,** the late District Educational Officer of the place to reorganise and reform the curriculum and syllabus of the Elementary Education. It was there resolved to introduce, among very many essential things, some local history into the curriculum and include stories from 'Stala-Puranas' there in connexion therewith. This should be neither a mere scrapheap of incoherent fables from old legends on the one hand, nor on the other a pretentious history set forth on constitutional lines; but a golden mean betwixt the two—reliable history in the form of easy stories judiciously selected from traditional lore.

This modest book seems to strike exactly that golden mean. Kumbakonam is a very ancient historic centre where there is no lack of traditions ol d legends, and inscriptions, where the historian is apt to be overwhelmed by a flood of puranic fables and myths, of truth and fiction, hopelessly intertwined, that he can hardly make head-way. The author must have possessed sturdy historical judgement to sift the material before him and to collate and organise the whole in the shape which he has given it. The accounts given are just what would appeal to young minds and interest them eminently.

Among the many things that find mention here are—the greater width and navigable depth of the Cauveri in the years gone by, historic accounts of the famous Vaishnavaite and Saivaite temples some of which have served as seats of advanced learning, an account of the Mahamagham which gives the town its great pride, the advent of the Mutt of His Holiness Sri Sankaracharya, a running sketch of the great personages such as Govinda Dikshitar, Dabir, Pacchayappa Mudali, the Makers of the town as they may be called, the origin of the famous streets, buildings etc. There is again the interesting story of Moorkha Nayanar coming to this town over **1300** years ago to find funds for his charities.



One of the most interesting and instructive accounts given in the book is one about the Ancient Municipality of Kumbakonam, the membership of which was open only to men of mature age, sound education and sterling character. There was franchise even then and votes were recorded in cadjan leaves and deposited in narrow-mouthed pots placed at convenient centres. These pots were opened in a public "Mandapam" by an aged and respected citizen. The necessary precautions against abuse were duly taken. Thirty members were thus elected who formed the then Municipal Council of Kumbakonam. These thirty councillors divided themselves into six committees of five members each to administer the different departments. This shows that the citizens of Kumbakonam were thoroughly familiar with democratic institutions as far back as a thousand years ago. The far-reaching effects of the introduction of Free and Compulsory Education by the present Municipal Council have also been touched upon.

The language is simple and homely without lapsing into vulgar colloquialism, and the style so easy that the young reader may read and understand without the teacher's help.

This, I think, is the first book of its kind in what may be called the byways of history, and no

pains has been spared in fitting it to the standard of the young readers for whom it is intended. It will, I hope, evoke a nascent historic spirit and a laudable spirit of research in the impressionable minds of the young lads. It is bound at all events to make them think of their home, their country, before aspiring to learn of other countries— and this by itself is no mean achievement. I am quite confident that this venture will meet with encouragement from all the teachers of this district and will prove the precursor of many such.

Camp, Tuhili }
23—7—'24. }

**P. K. Pattabhirama Sastri,**
*Deputy Inspector of Schools,*
Kumbakonam.



# முன்னுரை.

நமது ஊரில் சென்ற இரண்டுவருடகாலமாக, சென்னை அரசாங்கமந்திரியான கனம் ஸர் ஏ. பி. பாத்ரோ அவர்களின் பெரும் முயற்சியின் பேரிலும், நமது நகரபரிபாலன சபையாரின் ஊக்கத்தின்பேரிலும் ஆரம்பக்கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கற்றுக்கொடுக்கப் பட்டுவருகிறது என்பது எல்லோருமறிந்தவிஷயம். இவ்வாரம்பக்கல்விப்பள்ளிகளில் முக்கியபாடமாகிய உள்ளூர் சரிதைக்குப் பாடபுத்தகமில்லாத குறையொன்றை ஒருவாறு நீக்கவே, நான் இச்சிறு புத்தகத்தைக் கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள், ஸ்தலபுராணம், கர்ணபரம்பரைபோன்ற ஆதாரங்களின்மீது எழுதியுள்ளேன்.

இதனைத் தமக்கு அர்ப்பணம் செய்ய அனுமதியளித்த ஸ்ரீமான் ராவ்பஹதூர் சு. அப்புசாஸ்திரிகள் அவர்களுக்கும் எனது வேண்டுகோளுக்கிணங்கி முகவுரை எழுதிய ஸ்ரீமான் ப. கி. பட்டாபிராமசாஸ்திரிகள் அவர்களுக்கும், என்னை ஆங்காங்கு ஊக்கியும் புரூப்களைப்பரிசோதனைசெய்தும் கும்பகோணச் சிறப்பைப்பற்றிய பாடல்களை எழுதிக்கொடுத்தும் எனக்குதவிய எமது பாடசாலைத் தமிழாசிரியரும் என்னருமை நண்பருமான ஸ்ரீமான் பி. ஸ்ரீனிவாஸய்யரவர்களுக்கும் வந்தனங்களைத் தவிர நான் அளிக்கக் கூடிய கைம்மாறு வேறேதேனுமுளதோ?

இப்புத்தகத்திலுள்ள பிழைகளைப் பொறுத்து, இதனிலுள்ள அக் குற்றங்குறைகளை நீக்குவதற்குரிய சாதனங்களை எடுத்துக் கூறுவோர்க்கு நான் என்றும் கடமைப்பட்டவனாக இருப்பேன்.

29—7—1924. }
கும்பகோணம். }

வி. இராமகிருஷ்ணசாஸ்திரி.

உ

# விஷய அட்டவணை.


| அத்தியாயம். | விஷயங்கள். | பக்கம். |
|---|---|---|
| 1 | கும்பகோணம் என்னும் பெயர் வந்த வரலாறு. | 1 |
| 2 | சைவக்கோயில்கள் பாகம் 1. | 4 |
| 3 | சைவக்கோயில்கள் பாகம் 2. | 6 |
| 4 | சாரங்கபாணிகோயில் பாகம் 1. | 12 |
| 5 | சாரங்கபாணிகோயில் பாகம் 2. | 16 |
| 6 | மற்றைய வைணவக்கோயில்கள். | 19 |
| 7 | மகாமகம், என்னும் பெருந்திருவிழா. | 23 |
| 8 | நமது ஊரின் பழைமை. | 27 |
| 9 | காவிரி நதி. ... ... ... | 29 |
| 10 | நமது ஊர் சோழராஜதானியா? | 34 |
| 11 | மூர்க்கநாயனாரின் கதை. | 37 |
| 12 | கோவிந்த தீக்ஷிதர் பாகம் 1. | 39 |
| 13 | கோவிந்த தீக்ஷிதர் பாகம் 2. | 42 |
| 14 | ஸ்ரீமத்சங்கராசாரியாரின் மடம் பாகம் 1. | 46 |
| 15 | ஸ்ரீமத்சங்கராசாரியாரின் மடம் பாகம் 2. | 49 |
| 16 | கொட்டையூர். ... ... ... | 54 |
| 17 | சில தெருக்களின் சரித்திரம். | 57 |
| 18 | நமது ஊர் எப்பொழுது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. | 61 |
| 19 | நமது ஊரிலுள்ள கச்சேரிகளும் வேறு கட்டிடங்களும். | 63 |
| 20 | இவ்வூர் முனிஸிபாலிடி. | 68 |
| | செய்யுட்பொருட் குறிப்பு. | 78 |


---

உ

# கும்பகோணச் சிறப்பு.

ஸ்ரீமான். பி. ஸ்ரீநிவாஸஅய்யரவர்களால் இயற்றப்பட்டவை.

"வீடலாலவாயிலாய் விழுமியார்கணின்கழல்"
எனவரும் தேவாரத்தைப் போற் பாடிக் கொள்க.

## சந்தவிருத்தம்.

1. பொன்னிநீர் வளஞ்சுரந்த பொழிற் குடந்தைமாநகர்
அன்னமிக்க சோழர்நாட்டின் அழகமைந்த முகமதாம்
மன்னுசீர்க் குடத்தினின்று வந்திலங்கும் ஈசனார்
அன்னை மங்களாம்பிகையோ டனைவருக்கு மருளுமால்.

2. எங்கள்மாலுஞ் சார்ங்கபாணி யென்னுங்கோலங் கொண்ட-
அங்கணாரா வமுதனாகி யலரின்மங்கை செங்கரம் [தோடு
துங்கவேமரிஷியும் வேண்ட சுரநும்வாழ்த்தப், பற்றியே
அங்கண்மழிசை மன்னன்பாட அறிதுயிலிங்கமர்ந்ததே.

3. அரியரனாலயங்கள் அணிமிக நிறைந்துமே
கரிசொழிக்குங் காவிரி கடவுட்கங்கை யாதியாம்
விரிதிரைநன்னீரெலாமா மகக்குளத்தின் மேவலால்
வரிசைமிக்க விக்குடந்தை மாநிலத் துயர்ந்ததே.

4. அப்பருஞ் சம்பந்தருமவ் வாழ்வார்களோ ராறுவரும்
மெய்ப்புகழ்ச் செந்தமிழ்ப்பாட விளங்கு கும்பகோணமேம்
ஒப்பிலாத சங்கராசாம் லோகதருவும் மூர்க்கரும்
தப்பறு கோவிந்தர்வாஜ பேயர்தங்குஞ் சதிரதே.

5. ஆங்கிலக்கல்லூரிபலவும் ஆரியமொழியின்சாலையும்
பாங்கினுற்ற கும்பகோணம் பச்சையப்பவள்ளலும்
ஓங்குசீர்த்தி போர்ட்டர்போற்ற வுற்றநங்கோபாலராவ்
தேங்குபுகழின் சேஷய்யாவும் சிறக்கவிற்றிருந்ததே.

6. வாழிசெந்தமிழினோடு வளர்ந்திடு மொழியெலாம்
வாழிநங் குடந்தையோடு வயங்குபல் லுலகமும்
வாழிநம் மாசராதும் ஐந்தாந் ஜார்ஜ்வள்ளலும்
வாழியே யுலகின்மக்கள் மகிழ்ச்சி மிக்குவாழ்கவே.

---

# கும்பகோண சரித்திரம்.

## அத்தியாயம் 1.

### கும்பகோணம் என்னும் பெயர்வந்த வரலாறு.

முன்னொரு காலத்தில் இவ்வுலகத்தை யெல்லாம் படைத்த பிரமதேவர் கைலாயமலையின்மேல் வீற்றிருந்த சிவனைப்பார்க்கச் சென்றார். பரமசிவன் "எங்குவந்தீர்?" எனக்கேட்க, நான்முகன் பின்வருமாறு பதிலுரைத்தார். "ஐயா, இன்னும் சில நாட்களுக்கெல்லாம் இவ்வுலகத்தையே அழிக்கப்போகிற பெரும் வெள்ளம் வரப்போகிறதே. அதில் இவ்வளவு அழகிய வஸ்துக்களெல்லாம் நாசமாய் விடுமே. மறுபடியும் நான் இவைகளைச் சிருஷ்டிப்பதென்றால் மிகு கஷ்டமாமே. என்ன செய்வேன் எனக்கு உதவிபுரியலாகாதா?"

இதைக்கேட்ட பரமசிவனார் "பிரமதேவரே, நீர் பயப்படவேண்டியதில்லை. நான் சொல்லும்படிசெய்யும். அமிருதத்தையே ஜலமாக விட்டுப்பிசைந்து மண்ணால் ஒரு குடம் செய்வீராக. அதனை அமுதத்தாலேயே நிரப்பி நான் தரும் ஒரு விதையையும் அதனுட் பொதிந்துவைப்பீராகவும். அவ்விதைக்குச் 'சிருஷ்டிபீஜம்' என்று பெயர். எல்லா வஸ்துக்களையும் உண்டாக்கக்கூடிய சக்தி அதற்கு

உண்டு. பின்னர் அக்குடத்தின்மேல் மாவிலை, வில்வம், தேங்காய், பூணூல் முதலியவற்றையும் வையும். அக் குடத்தைப் பிறகு உமது இருப்பிடத்திற்கே கொண்டு போய் வைத்துக்கொள்ளும். பிரளயகாலம் வந்தால் இப் பூர்ணகும்பம் வெள்ளத்தில் மிதந்துகொண்டே தென்னாடு சென்று அங்கோரிடத்தில் தங்கிவிடும். அப்பொழுது அவ்விடம் நான் எழுந்தருளி வேண்டியவற்றைச் செய் கிறேன்" என்று தைரியங்கூறி நான்முகனை அனுப்பி விட்டார்.

பிரளயமோ வந்துவிட்டது. எங்குப் பார்த்தாலும் பெரும் வெள்ளம். மழை ஓயாது பெய்தது. காற்றோ மென்மேலும் வீசியது. பூவுலகெல்லாம் ஜலமயமாகிவிட் டது. இச்சமயம் பிரமதேவர் கைலைநாதன் சொற்படி செய்துவைத்திருந்த குடம் தெற்கே மிதந்துவந்து ஓரி டத்தில் தங்கியது. வெள்ளம வடிந்தது. ஊழிமுடிந்தது. உடனே நான்முகனும்மற்றுமுள்ள பலதேவர்களும்அந்தக் கடம் நின்ற இடத்தினில வந்து பூமாரி சொரிந்து "இது வல்லவோ திருநாடு, இதுவல்லவோ புண்ணியபூமி" எனப் புகழ்ந்தனர். அக் கலசத்தின் மீதிருந்த மாவிலை, தேங் காய், பூணூல், வில்வம் முதலியன போய் விழுந்த இட மெல்லாம் சிவக்ஷேத்திரங்களாக மாறின.

அமுதக்குடம் தங்கியதை உணர்ந்த சிவபெருமான் தம் வெள்ளியங்கிரியைவிட்டெழுந்து ஓர் அவசரகாரிய மாகச்சிறிதுநேரம்செல்வதாகபபார்வதிதேவியிடம்விடை பெற்றுக்கொண்டு தென்னாடுநோக்கிப் புறப்பட்டார். ஆனால் தம் உண்மை உருவத்தோடு வரவில்லை. அவர் ஒரு வேடன்வேடம்பூண்டு திருவிடைமருதூரின் அருகில்வந்து



கின்றார். அங்கிருந்தபடியே தமக்குக் கொஞ்சதூரத்தில் தோன்றிய அமிர்தகடத்தின்மீது வில்லை வளைத்துப் பல அம்புகள் எய்யத்தொடங்கினர். ஆனால் ஒருகணையும் அக் குடத்தை அணுகவேயில்லை. ஆதலின் அவர் இன்னும் கொஞ்சம் பக்கத்தில் வந்து ஓரம்பைத் தொடுக்க, அது வேகத்துடன் பாய்ந்து குடத்தின்வாயைத் தகர்த்தெறிந் தது. உடனே அவ்வாய் ஆகாயத்திலெழும்பி குடமிருந்த இடத்திற்குத் தென்கிழக்கு மூலையில் போய்விழுந்தது. ஆச்சர்யம்! அது விழுந்ததும் ஓர் இலிங்கமாய் மாறிவிட் டது. அந்தஇடத்தைத்தான் நாம் இன்றும் "குடவாசல்" அதாவது "குடவாயில்" என்று வழங்குகிறோம்.

வாய் பிளந்ததும் அக் குடத்திலிருந்த அமுதம் ஒரே வேகத்துடன் ஐந்துகூப்பீடு தூரம் வீசிப் பாவியது. ஆ னால் சிவபெருமானின்விருப்பப்படி அவ்வமுதம் இரண்டு கிணறுகளாகத் தேங்கியது. உடனே அவர் உடைந்து போன அவ் வரிய கடத்தின் துண்டுகளையெல்லாம் ஒரு லிங்கமாகப் பிடித்துவைத்து, பூஜைசெய்து அதனுட் புகுந்து மறைந்தார். இந்த லிங்கமே ஆதிகும்பேசுவரர். இவ் விரு கிணறுகளிலும் ஒன்று மகாமகக்குளம். மற்றொன்று பொற்றாமரை. இவ் வமிர்தகடம் வீசிப்பரவிய ஐந்துகூப் பீடுதூரமே நமது ஊராகும். இக்காரணத்தாலேயே இத னை ஸம்ஸ்கிருதத்தில் கும்பகோணம் என்றும், தமிழில் குடமூக்கு அல்லது திருக்குடந்தை என்றும் கூப்பிடலாயினர்.

# அத்தியாயம் 2.

## சைவக்கோயில்கள்

### பாகம். 1

இவ்வூரில் மிகவும் புராதனமானவை கோயில்களே. இக் கோயில்கள் இருவகைப்படும். அவை முறையே சைவக் கோயில்களும் வைணவக்கோயில்களுமாம். இவ்வத்தியாயத்தில் சைவக் கோயில்களைப்பற்றி மட்டும் காண்போம்.

### கும்பேசுவார்கோயில்.

சென்ற அத்தியாயத்தில் கும்பேசுவரர் கைலையிலிருந்து நமது ஊருக்கு எழுந்தருளிய வரலாற்றைக் கண்டோம். கைலையில் பார்வதிதேவியார் தம்கணவரை எதிர்நோக்கிக்கொண்டு வெகுகாலம் காத்திருந்தனர். தம் பர்த்தாவோ திரும்பிவரவில்லை. உடனே அவரைத்தேடிக்கொண்டு இவ்விடம் வந்துசேர்ந்தனள். தம்மனைவியைக் கண்டதும் கும்பேசர் "நீயும் என் பக்கத்திலிருந்துகொண்டு எல்லா ஜனங்களுக்கும் மங்களங்களைச் செய்வாயாக" எனக் கட்டளையிட்டார். ஆதலின் அம்மையும் இங்கு மங்களநாயகி எனப் பெயர்பூண்டு எழுந்தருளினாள்.

### நாகேசுவரர் கோயில்.

பிரளயகாலத்தில் அமுதக்கடத்தின்மீதிருந்த வில்வம் கும்பேசருக்குத் தென்கிழக்கில் போய்விழுந்தது. அது விழுந்த இடத்தில் ஒரு வில்வவனம் உண்டாகி, அதன் நடுவில் ஒரு லிங்கம் தோன்றிற்று. ஒரு சமயம் இப் புவியைத் தாங்கும் ஆதிசேஷன் களைப்படைந்தான். உடனே அவன் பரமசிவனைத் துதிக்க, அவர் அவனுக்கு இந்த வில்வ வனத்தில் லிங்கவடிவமாய் எழுந்தருளியிருக்கும் தம்மை ஆராதிக்கும்படி ஆக்கினைசெய்தார். ஆதிசேஷனும் அவ்வாறே செய்ய, அவர் ஒருகாலத்திலும் ஒரு பணு முடிகூடச் சளைக்காதிருக்கும்படி அவனுக்கு வரம் தந்தருளினார். அவ்வாறு நாகராஜனுக்கு வரமளித்தமையால் வில்வவனத்திலிருந்த லிங்கத்திற்கு "நாகேசுவரர்" என்னும்பெயர் வந்தது.



### பாணபுரீசுவரர் கோயில்.

சென்ற அதிகாரத்தில் நாம் பரமசிவனார் அமுதக்கடத்தின்மீது ஒருகணையை எய்து அதனைச் சிதைத்தார் என்றோம். அவர் அம்புதொடுக்கும்போது நின்ற இடத்திற்குப் பாணபுரம் அதாவது தற்காலத்திய வாணாதுறை என்னும் பெயர் ஏற்பட்டது. ஆதலின் அவ்விடத்தில் வீற்றிருக்கும் ஈசனுக்கும் "பாணபுரீசர்" என்னும் திருநாமமும் வழங்கலாயிற்று.

இவைகளைத்தவிர வேறுசைவக்கோயில்களுமுள்ளன. அவைகளைப் பற்றி வெகு சுருக்கமாகவே கூறுவோம். அமுதக்குடத்தின்மீதிருந்த தேங்காய் விழுந்தஇடத்தில் அபிமுகேசரும், பூணூல் விழுந்த இடத்தில் கௌதமீசுவரரும், அக் கடத்தை மேருமலையின்மீது தாங்கிய உறி விழுந்த இடத்தில் சோமேசுவரரும் எழுந்தருளினர்.

# அத்தியாயம் 3.

## சைவக்கோயில்கள்.

### பாகம் 2

மேற்கூறிய புராணக்கதைகளிலிருந்து நமது ஊரிலுள்ள பல சைவக்கோயில்களுக்கும் பெயர்வந்தகாரணங்களை நீங்களறியலாம். இனி அவைகளின் பிற்கால சரித்திரத்தை ஆராய்வோம்.

முதன்முதல் இக்கோயில்கள் எப்பொழுது கட்டப்பட்டன என்பதைப் பார்ப்போம். புராணங்கள் புகழும் ஆதிகாலத்தில் இவைகளின் கர்ப்பகிரகங்கள், அதாவது மூலவிக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம் மட்டுமே இருந்திருக்கக்கூடும். அக்காலத்தில் சுற்று மதில்களும் கோபுரங்களும் இருந்திருக்கமாட்டா. ஏனெனில், இக்கோயில்களைப்பற்றிய சாஸ்திரமொன்று இருக்கிறது. அச்சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தவர்கள் இந்த இந்தக்காலத்தில் இந்தஇந்த மாதிரிதான் கோவில்களைக் கட்டியிருக்கக்கூடும் என்று நிச்சயித்திருக்கிறார்கள். அவர்களே, இவைகள் கட்டப்பட்டு 1000வருஷங்களுக்குமேல் ஆகவில்லை என்று அபிப்பிராயப்படுகின்றனர்.[1]

இனி இவைகளின் கர்ப்பகிருகங்கள் மட்டும் ஆதிகாலத்திலேயே இருந்ததற்குப் புராணங்களைத் தவிர வேறு சாக்ஷிகளும் இருக்கின்றன. அவைகளை நாம் இப்பொழுது விசாரிப்போம். முற்காலத்தில் திருஞானசம்பந்தர் என்றும், திருநாவுக்கரசர் என்றும், ஸ்ரீசுந்தரமூர்த்தி என்றும்

1 Refer Archaelogical Report 1893



மூவர் சைவசமயாசாரியர் இருந்தனர். இவர் மூவர் என்றும் வழங்கப்படுவர். இவர்களுள் முதலிருவர் ஒரு காலத்தினராயும், சுந்தரர் வேறுகாலத்தினராயும் இருந்த போதிலும், இவர்கள் அக்காலத்திலிருந்த எல்லாச் சிவஸ்தலங்களுக்கும் சென்று சிவபெருமானைப்பற்றிப் பாடல்கள் பாடிவந்தனர். இவைகளெல்லாவற்றையும் சேர்ந்ததே தேவாரம் என்னும் தமிழ்வேதமாய் விளங்குகிறது.

இத்தேவாரத்தில் எந்த ஸ்தலத்தைப்பற்றிப் பாடியிருக்கின்றனரோ, அதைப் பாடல்பெற்ற ஸ்தலம் என வழங்குவர். நமது குடமூக்கோ முதலிருவராலும் பதிகம் பெற்ற ஸ்தலம். ஸ்ரீ சுந்தரர் ஊர்த்தொகையுள் வைத்து வணங்கியுளர். இவர் திருக்குடமூக்கு என்று கும்பேசுவரர் ஆலயத்தையும், திருக்குடந்தைக் கீழ்க்கோட்டமென்று நாகேசுவரர் ஆலயத்தையும், திருக்குடந்தைக் காரோணமென்று சோமநாதராலயத்தையும் பற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். தேவாரப்பாடல்களின் நடை கஷ்டமாகவே யிருக்கும். எனினும், அவற்றுட் கொஞ்சம் சுலபமான இரு பாட்டுக்களை இங்குப் பார்ப்போம்.

செறிகொண்ட சிந்தைதனுட் டெளிந்து தேறித்
தித்திக்கும் சிவபவனத் தமுதம் போலு
நெறிகொண்ட குழலியுமை பாகமாக
நிறைந்தமரர் கணம்வணங்க நின்றார்போலு
மறிகொண்ட கரதலத்தெம் மைந்தர்போலு
மதிலிலங்கைக் கோன்மலங்க வரைக்கீழிட்டுக்
குறிகொண்ட வின்னிசைகேட் டுகந்தார்போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

இதைப் பாடியவர் திருநாவுக்கரசர். இதில் சிவபெருமான் எல்லாமாயின தன்மை விளக்கியருளப்பட்டது.

வாரார் கொங்கை மாதோர் பாகமாக வளர்சடை
நீரார் கங்கை திங்கள்சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன்றேந்தி யந்தண் குழகன்குடமூக்கிற்
காரார் கண்டத்தெண்டோ ளெந்தை காரோணத்தாரே.

இப்பாட்டு திருஞானசம்பந்தரால் சோமநாதரைப்பற்றிப் பாடப்பெற்றது.

இம் மூன்று சமயாசாரியர்களுள்ளும் காலத்தால் முந்தியவர் திருநாவுக்கரசர். இவர் 1300 வருஷங்களுக்கு முன் ஜீவித்திருந்ததாகச் சொல்லுகிறார்கள்.[1] ஆதலின், இவரால் பாடப்பெற்ற ஸ்தலங்களும் அக்காலத்தில் பிரஸித்திபெற்றனவாய் இருந்திருக்கவேண்டும். ஆகையால் நமது ஊரிலிருக்கும் சிவபெருமானின் கோயில்களான இம் மூன்றும் மூவருடையகாலத்திற்கு முற்பட்டிருத்தல் வேண்டுமென்பது தெளிவாகின்றது.

இந்தக் கோயில்களின் உட்சுவர்களில் கல்வெட்டுகள் இருக்கின்றன. அவைகளை வாசிப்பது கஷ்டம். என்றாலும் கொஞ்சம் சிரமப்பட்டுப்பயின்றால் அவற்றை வாசித்துவிடலாம். அவைகளில் கோயில்கட்டியவரின் பெயர் கோவிலுக்கு மானியம்விடுத்தவரின் பெயர், கோவிலின் சொத்துக்கள், கோவில் கட்டப்பட்ட காலம் முதலியவை தெரியவரும். நாகேசுவரர் கோயிலிலும், பாணபுரீசுவரர் கோயிலிலும் அதிகம் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவற்றுள் சுலபமாக இருக்கும் ஒன்றை இங்கே உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறேன்.

"ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கிரவர்த்திகள் மதுரையும், ஈழமும், கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொ

1 மு. ராகவய்யங்காரின் அபிப்பிராயம் இது.



ண்டருளி, விஜயாபிஷேகமும் வீரா அபிஷேகமும்பண்ணி அருளின ஸ்ரீ திரிபுவன வீரதேவர்க்கு யாண்டு முப்பத்தைந்தாவது உய்யக்கொண்டார் வளநாட்டுப் பாம்பூர் நாட்டுத் திருக்குடமூக்கில் உடையார் திருக்கீழ்க்கோட்டமுடையார் கோயில் முதல் பிரகாரத்துக் கீழைத் திருமாளிகையில் வேளூர் கிழவன் ஆழ்வான் திருபுறம்பியமுடையானை செயபியன் பல்லவராயன் எழுந்தருளுவித்த உடையார் திருபுறம்பியமுடையார்க்கு அமுதுபடிக்கு நாளொன்றுக்கு.....வேளை 1-க்கு அரிசி நாழியும். இவ்வரிசியால்வந்த பருப்பமுதும், கறியமுதும், உப்பமுதும், மிளகமுதும், தயிரமுதும், நெய்யமுதும் அடைக்காயமுதும், பாக்கும், இலை அமுதும், மற்றும் திருமஞ்சனமும், திருப்பள்ளித்தாமமும், திருமேற்பூச்சும், உள்ளிட்டவெஞ்சனத்திற்கும், சிறுகாலைச்சந்தி விளக்கு இரண்டும், உச்சிச்சந்தி விளக்கு ஒன்றும், இரவைச்சந்தி விளக்குநாலும், ஆக இச்சந்திவிளக்கு ஏழுக்கும், வேண்டும் திருவிளக்கு எண்ணெயும், இந் நாயனார் ஸ்ரீ பண்டாரத்து உடலிலே, இத் திருபுறம்பியமுடையார்க்குப் பூஜைக்கும், அமுதுபடிக்கும் விடக்கடவதாகவும். இப்படி விடுமிடத்து முப்பத்தைந்தாவது சித்திரை மாதம் முதல் நிபந்தக்கட்டாக விடக்கடவதாகவும். பூஜிக்கும் நம்பியார் சிவப்பிராமணன், திருமஞ்ஜனமமைப்பாருக்கும் வேண்டும் நிபந்தத்துக்கு இக்கோயிலில் உடலிலேவிட்டு இத் திருபுறம்பியமுடையார் அமுது செய்தருளின சோறுநாழியும் சோற்றடைப்பிலே கூட்டிக்கொள்ளுவதாகவும்..............."

இச்சாசனத்தில் இரண்டுமூன்று விஷயங்களை நீங்கள் கவனிக்கவேண்டும். முதலாவது, இச்சாசனம் திரிபுவன

வீரதேவர் என்னும் அரசர் பட்டத்துக்கு வந்த 35-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இவ்வரசர் 700-வருஷங்களுக்கு முன் இருந்தார்.[1] ஆகையால் இச்சாசனம் எழுதியும் அவ்வளவு காலமாகிறது.

இரண்டாவது, இதிலுள்ளவிஷயத்தைப்பார்ப்போம்; ஆழ்வான் திருப்புறம்பியம் உடையான் என்பவன் இக்கோவிலின் கீழைப்பக்கத்தில் ஒரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தான். அதன் பெயருந்திருப்புறம்பிய உடையார். அந்த விக்கிரகத்தின் ஆராதனைக்காக 17000 காசு மூலதனம் வைத்தான். அதிலிருந்துநைவேத்யத்திற்கும் விளக்கிற்கும்செலவிடும்படி ஏற்பாடுகள்செய்தான்.

இச்சாசனம் நாகேசுவரசுவாமி கோயில் கர்ப்பகிருகத்தை ஒட்டிய வடக்குப் பிரகாரத்தின் கீழைக்கோடியிலிருக்கிறது.

இக் கோயிலில் இதைப்போலவே பல கல்வெட்டுகள் இருக்கின்றன. ஆயிரம் வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட மற்றொருகல்வெட்டிருக்கிறது. இதில்[2] "பிரபாகரம்' என்னும் ஒரு பெரியபுத்தகம் அறிஞர்களால் இக் கோயிலில் சொல்லிக்கொடுக்கப்பட்டது என்று அறிகிறோம்.

---

1 'திரிபுவன வீரதேவர்' என்னும் பட்டத்தை முதன்முதல் தரித்தவர் மூன்றாவது குலோத்துங்கர். அவர் சிங்காதனம் 1178 கி. பி. யில் ஏறினர். ஆகையால் இக்கல்வெட்டு 1178 + 35 = 1213 கி. பி. இவ்வரசர் காலத்தில்தான் பவணந்திமுனிவரால் தமிழிலக்கணமாகிய 'நன்னூல்' எழுதப்பட்டது.

2 'பிரபாகரம்' என்பது பிரபாகரரால் பூர்வ—மீமாஞ்சைக்கு எழுதப்பட்ட வியாக்கியானம் இவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருந்தவர்.



இனி நாகேசுவரர்கோயிலில் வருஷந்தோறும்கொண்டாடப்படும் சூரியபூஜை என்பதன் சரித்திரத்தை ஆராய்வோம். இக் கோயிலில் சூர்யதேவனுக்குத் தனிக்கட்டிடமொன்றிருக்கிறது. ஆதிகாலத்தில் சூர்யன் நாகேசனை இவ்விடம் பூஜித்ததாகச் சொல்லுகிறார்கள். வருஷத்துக்கொருமுறை சித்திரைமாதத்தில் சூரியகிரணங்கள் கீழை வாயில் வழியாக நேரேசென்று, கருப்பக் கிருகத்திலுள்ள இலிங்கத்தின்மேல் விழுகின்றன. இப்படி மூன்றுநாட்கள் வரை நிகழ்கின்றன. இதையே சூரியபூஜை என்று சொல்லுகின்றனர்.

புராணத்திற் குறிக்கப்பட்டது தவிர, சூரியபூஜையைக் குறித்து நாயன்மார், தேவாரத்தில் பாடவில்லை. இக் கோவிலின் வாயிலை கதிரவன் கதிர்கள் கடவுள்மேல் பட்டு விளங்கும்படி. நோக்கக் கணக்கெடுத்துக் கட்டிய சிற்பியின் சாமர்த்தியம் மிகவும் மெச்சத்தக்கது.

இவ்வண்ணமே வருடத்திற்கு மூன்றுநாள் செங்கற்பட்டுஜில்லாவிலுள்ள நாகாலபுரம் என்னுமிடத்திலும் சூரியபூஜை நடக்கிறது. அக்கோயில் கட்டப்பட்டு 400 வருஷங்களுக்கு மேலாகவில்லை. அதைக்கட்டுவித்த அரசனே[1] இவ்வூரைப்பார்க்க ஒருசமயம் வந்திருக்கிறான். ஆதலின், அவனுடைய தூண்டுதலினாலேனும், அன்றி அவனுடைய சிற்பியின் உற்சாகத்தினாலேனும் இக் கோபுரம் கட்டப்பட்டிருக்கலாம்.

---

1. Ref Sewll's Antiquities
அதைப்புதுப்பித்துக் கட்டிய அரசர் கிருஷ்ணதேவராயர் என்னும் விஜயநகரத்துச் சக்கிரவர்த்தியே.

# அத்தியாயம் 4.

## சாரங்கபாணிகோயில்.

### பாகம் 1.

இனி இவ்வூரிலுள்ள வைணவக் கோயில்களின் சரித்திரத்தைப் பார்ப்போம். இவைகளில் முதலாவதும் முக்கியமானதும் சாரங்கபாணிஸ்வாமியின் கோயில்.

முன்னொருகாலத்தில் பிரம்மதேவரும் சூரியனும் மகாவிஷ்ணுவைக்குறித்துத் தவம் செய்தனர். இதைக் கண்டு களிப்புற்றமகாவிஷ்ணு இவர்களிருவருக்கும் தனித்தனியே இரண்டுவிமானங்களை அளித்து, அதில் தம்மை வைத்து ஆராதனை செய்துவரும்படி, திருவாய்மலர்ந்தருளினார். சிறிதுகாலஞ் சென்றபிறகு இவ்விருவிமானங்களும் சூரியவம்ச அரசனான இக்ஷ்வாகுவினிடம் போய்ச் சேர்ந்தன. அங்கே இவ்விரண்டும் ஒன்றாகச்சேர்ந்துவிட்டன. அதை இக்ஷ்வாகு குலமன்னரெல்லோரும் பூஜை செய்துவந்தனர்.

ஸ்ரீவிஷ்ணுமூர்த்தி இக்ஷ்வாகு குலதிலகராய் இராமர் என்னும் திருப்பெயர் தாங்கி அவதாரம்செய்து, இராவண வதம் செய்தபின்னர், பட்டாபிஷேகம் அயோத்தியில் செய்துகொண்டாரென நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அச்சமயத்தில் அவர் தமக்குத் துணைபுரிந்த இலங்கையரசன் விபீஷணனுக்கு இவ்விமானத்தைப் பரிசாக அளித்தனர். இதனை எடுத்துவந்த விபீஷணாழ்வான் சற்றுக்காவேரி நதியின் மத்தியில் இதை வைத்துவிட்டான். அதைப் பிறகு பேர்த்தெடுக்கமுடியவில்லை. அவ்விமானம் தங்கிய இடமே ஸ்ரீரங்கம். அங்கே பள்ளிகொண்டிருப்பவர்



ரங்கநாயகர். ரங்கநாயகரும் விபீஷணனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாம் காவிரியின்மத்தியில்இருந்துவிட்டார்.

இதற்குப் பலநாட்களுக்கு முன்னமே மகாலக்ஷ்மி விஷ்ணுவிடமிருந்து பிரிந்திருந்தனள். அதற்குக் காரணமான ஒருகதையைப் பார்ப்போம். முற்காலத்தில் பிருகு ரிஷி என்பவர் திருமாலைப்பார்க்க வைகுண்டத்திற்குச்சென்றார். அவர் அங்கே லக்ஷ்மிதேவியார் மலரடிகளை வருடபாம்பணையில் படுத்திருந்த பெருமானைக்கண்டார். திருமால் தம்மைக் கவனியாததைக்கண்டு முனிவர்கோபங்கொண்டவராய்த் திருமாலின் மார்பில் உதைத்தார். உடனே திருமால் எழுந்து மரியாதை செய்துரிஷியையனுப்பிவிட்டார்.

பின்னர் மகாலக்ஷ்மி தன் கணவனைநோக்கி "சுவாமி, உங்கள் மார்பில் உதைக்கும்படி அந்த ரிஷிக்கு என்ன அவ்வளவு ஆணவம்? உங்களதுமார்பு எனக்கினிய இருப்பிடமன்றோ? நீங்கள் அவரை உடனே தண்டியாவிடில் நான் உங்களிடம் இரேன்" என்று கூறினாள். திருமாலோ அதைக்கேளாதவர்போல் இருந்துவிட்டார். ஆதலின் லக்ஷ்மிதேவி கோபத்துடன் அப்பெருமானை விட்டகன்றனள்.

அகன்றதேவி சிறிதுகாலத்துக்குப் பிறகே, தான் செய்தகார்யம் பிசகென உணர்ந்தாள். உடனே திருமாலை மீண்டும் அடையத் தவம் செய்ய எண்ணங்கொண்டாள். அத்தவம்புரிய நல்லதோர் இடமும் வாய்த்தது. திருக்குடந்தையில் ஆதிகும்பேசரின் சந்நிதியிலிருக்கும் அமுதவாவியில் பொன்தாமரை போன்று தெய்வமகிமையால்

மலர்ந்திருந்தது. தேவியார் அப்பூவின் நடுவில் நின்று தவம் செய்யலாயினாள். பொன்தாமரை தோன்றியதால் அதை இன்றும் "பொற்றாமரை" என வழங்குகிறோம்.

இதற்குள் பிருகுமுனிவர் தம் குற்றத்தை நினைத்து வருத்தப்படத் தொடங்கினார். அக்குற்றம் நீங்குவதற்காக, மறுபிறப்பில் தாம் மகாலக்ஷ்மியைப் பெண்ணாக அடைந்து அவளைத் திருமாலுக்கு விவாகம் செய்துகொடுக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார். மறுபிறப்பில் அவர் ஹேமரிஷியாகப் பிறந்தார். தம் எண்ணம் நிறைவேறும்பொருட்டு அவரும் இவ்வூருக்கு வந்து தவம் செய்யலானார். இங்கே பொற்றாமரையின் நடுவில் தம்மைப்போலத் தவம் செய்துகொண்டிருக்கும் ஒரு பெண்ணைக் கண்டார்.

உடனே அப்பெண்ணினருகே சென்று "குழந்தாய் நீ யார்" என்று வினவினார். அதற்குத் தேவியார் "ஐயா, எனக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை. நீரே என்பிதாவாக இருந்து, நான் மகாவிஷ்ணுவைப் பதியாக அடைய உதவி செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். ஹேமரிஷி "பழம் நழுவிப் பாலில் விழுந்ததே. நானல்லவோ பாக்கியசாலி. குழந்தாய், அவ்வாறே செய்கிறேன்" என்று வாக்களித்துவிட்டுப் பொற்றாமரையின் வடகரையில் இதற்கு வேண்டிய தவங்களைச் செய்யலானார்.

இவ்வாறு இவ்விருவரும் அருந்தவம் செய்வதை ஸ்ரீரங்கத்திலிருந்த திருமால் உணர்ந்தார். தாம் இவ்விருவருக்கும் அருள்புரியத் திருவுள்ளங்கொண்டார். ஆதலின் ஸ்ரீரங்கத்தில் பிரம்மவிமானத்தை வைத்துவிட்டு, அதிலிருந்து ஸூர்யவிமானத்தைமட்டும் பிரித்துக்கொண்டு



காவிரி வழியாகப் புறப்பட்டு இவ்வூர்ப் பொற்றாமரைக் கரையில் வந்துசேர்ந்தனர். எங்குப்பார்த்தாலும் ஓரொளி பரவியது. தேவர்கள் பூமாரி சொரிந்தனர். தவத்திலிருந்த கோமளவல்லியும் [மகாலக்ஷ்மியும்] ஹேமரிஷியும் கண்ணைத் திறந்து பார்த்தனர், என்ன ஆச்சர்யம்! என்ன ஆநந்தம்! சார்ங்கபாணி ஆகிய திருமாலல்லவா எதிரில் நிற்கின்றார்? உடனே தேவியாரும் ரிஷியும் அவர் பாதங்களில் வீழ்ந்து பற்பல துதிகள் செய்தனர். திருமாலும் அவர்களை எழுப்பி அவ்விருவருடைய விருப்பங்களை முற்றுவிப்பதாக வரம் தந்து, அவ்வண்ணமே தேவகந்தர்வர்களும் கண்டு மகிழ, கோமளவல்லியாரை மகிழ்வுடன் மணம்புரிந்தனர். பின்னர் ஹேமரிஷிக்கு முக்தியையும் கொடுத்தருளினார்.

மணக்கோலத்துடன் விளங்கிய எம்பெருமானைப் பார்க்கப் பார்க்கக் கண் அமைதியுறவில்லை; எப்போதும் பார்த்தலையே விரும்பின; ஆதலின் "இவர் நமக்குத்தெவிட்டாத அமுதத்தைப் போன்றவர், ஆராவமுதர்." என்று தேவர்கள் வழிபாடு செய்தனர். ஆகையால் சாரங்கபாணிக்கு ஆராவமுதன் என்ற பெயரும் பெரிதும் வழங்குகின்றது. ஹேமரிஷி தவம் செய்த இடந்தான் பொற்றாமரையின் வடகரையிலுள்ள ஹேமரிஷிமண்டபம். தை மாதம் மகரசங்கராந்தி, அதாவது பொங்கல் திருநாள் அன்று, விமானம் பொற்றாமரைக் கரையில் வந்து நின்றமையால், அன்று பொற்றாமரையில் ஸ்நானஞ்செய்வது பெரும் புண்ணியந்தரும்என்று பெரியோர் கூறுகின்றனர்.

# அத்தியாயம் 5.

## சாரங்கபாணி கோயில்.

### பாகம். 2

எப்படிச் சைவக்கோயில்களைப் பற்றி நாயன்மார், தேவாரத்தில் பாடியிருக்கின்றனரோ அப்படியே வைணவக்கோயில்களைப்பற்றியும் விஷ்ணுபக்தர்கள் பாடியிருக்கின்றார்கள். இவ்வைணவபக்தர்கள் ஆழ்வார்கள் என்று போற்றப்படுகின்றனர். இவர்கள் பன்னிருவராவர். இம் மெய்யடியார்கள் வைணவஸ்தலங்களைப் பாடியவைகளை யெல்லாம் சேர்த்த புத்தகமே நாலாயிரப் பிரபந்தம் என விளங்குகிறது. பாடப்பெற்ற ஸ்தலங்களை வைணவர் ஆழ்வார் மங்களாசாசனம் பெற்றவை என்பர்.

திருக்குடந்தையோ இவ்வாழ்வார்களில் அறுவரால்[1] பாடப்பெற்றுள்ளது. இவ்வறுவரும் சாரங்கபாணியைக் குறித்துமட்டுமே பாடியிருக்கின்றனர். இவர்களுடைய பாட்டுக்கள் பக்திரஸம் நிரம்பியவை. அவற்றுள் நாம் இரண்டு பாட்டுக்களை மாத்திரம் பார்ப்போம்.

"ஆராவமுதே யடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய வுருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசுஞ்செழுநீர்த் திருக்குடந்தை,
ஏரார்கோலந் திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே."

1 திருக்குடந்தையைப் பாடிய ஆறு ஆழ்வார்கள்:— நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார்.



இதைப்பாடியவர் நம்மாழ்வார். இப் பாட்டின் தன்மை அன்பராயினார் அன்றி எம்மையொத்தவர் எடுத்துக் கூறும் எளிமை உடையதன்று. மற்றைப்பாடல்களும் இத்தகையனவே. எல்லோரும் பல்காலும் படித்துப் பயன் கொள்ளவே இங்கே எழுதலானோம்.

திருமழிசையாழ்வார் என்ற மற்றொருபக்தர் சாரங்கபாணி கோயிலுக்கு வந்து பகவான் பள்ளிகொண்டிருப்பதைக் கண்டார். கண்டதும் ஆநந்தபரவசராகி பின்வரும் பாட்டைப் பாடினார்.

"நடந்த கால்கள் நொந்தவோ. நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா றெழுந்திருந்து பேசு"—

என்று பாடியவுடன் பள்ளிகொண்ட பெருமாள் சிறிது தலைதூக்க, உடனே ஆழ்வார் "வாழி கேசனே" என்று பாட்டைப் பூர்த்தி செய்யப், பின்னர்த் திருமால் அப்படியே காட்சியளிக்கலாயினர் என்பதாய் ஒரு கதையுண்டு. இதனை அமுதன் திருவுருவம் உண்மையென்று எல்லோரும் அறியும்படி இப்போதும் அறிதுயில்கொண்டிருக்கின்றது.

இப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெய்வம் இருக்கும் ஊரிலேயே தம் காலத்தைக் கழிக்க எண்ணி இவ்வாழ்வார் இங்கேயே வாசம் செய்யலானார். முடிவில் அவர் இவ்வூரிலேயே முக்தியடைந்தார். இன்றும் சாத்தாரத்தெரு என்று வழங்கப்படும் சாத்தாதார் தெருவில் அவாலயமொன்று விளங்குகிறது.

இவ்வாழ்வார்களின் திருவாக்கில் கவனிக்கத்தக்க விஷயங்கள் இருக்கின்றன. அவர்களில் மூன்றுபெயர் இவ்வூரைச் சுற்றி மதில்கள் இருந்ததாகப் பாடியிருக்கின்றனர். நம்மாழ்வார் "கன்னார் மதில்சூழ்க் குடந்தைக் கிடந்தாய்" என்றும், திருமங்கையாழ்வார் "கற்போர் புரிசை"யுடன் கூடிய குடந்தை என்னும், பூதத்தாழ்வார் "மதில்குடந்தை" என்றும் கூறியிருக்கின்றனர். ஆகவே, அக்காலத்தில் நம்மூருக்கு மதில்கள் இருந்திருக்கலாம், என ஊகிக்கலாம்; இஃது ஆராயற்பாலது.

இவ்வாழ்வார்கள் சுமார் 900 வருஷங்களுக்கு முன் இருந்தனர்.[1] இவர்கள் சாரங்கபாணிகோவில்ஒன்றைப் பற்றி மட்டும் பாடியிருக்கிறார்கள்.[2] ஆதலின் அவர்கள் காலத்தில் சாரங்கபாணி கோவில் ஒன்றுமட்டுமே இருந்திருக்கவேண்டும். மற்றெல்லா வைணவகோயில்களும் பிற்காலத்தில் கட்டப்பட்டவையெனவே கருதலாம்.

இச்சாரங்கபாணி கோயிலின் கோபுரத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அது 147 அடி உயரமுள்ளது. அக்கோயிலின் மதில்களும் பெரியவை. இவையெல்லாம் 250 வருஷங்களுக்குமுன் தஞ்சாவூரை ஆண்ட நாயக்க அரசர்களால் கட்டப்பட்டிருக்கலாம். ஏனெனில் அவர்கள் விஷ்ணுபக்தியிற் சிறந்தவர்கள். அவர்கள் காலத்திற்றான் நமது ஜில்லாவிலுள்ள பல விஷ்ணு ஆலயங்களும்

1 இது கோபிநாதராயரவர்களின் அபிப்பிராயம்.

2 சக்கரபாணிகோயிலைப்பற்றி ஓர் ஆழ்வாராவது தனித்துப் பாடினதாகத் தெரியவில்லை. திருமழிசை ஆழ்வார் இவ்வூரிலேயே இருந்தவர். அவர்கூட ஒரு தனிப்பாட்டுப் பாடவில்லை.



கட்டப்பட்டன. மன்னார்கோவிலிலிருக்கும் ராஜகோபாலசுவாமிகோவிலின் மதில்களும் கோபுரங்களும் அவர்களால் கட்டப்பட்டவையே.

இக்கோயிலின் தேரையும் நீங்கள் பார்த்திருக்கலாம்; அது தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பெரியதேர்களில் ஒன்று. ஆழ்வார்களின் காலத்திலேயே இக்கோயிலின் ரதோத்ஸவம் பிரஸித்திபெற்றது, எனத் தெரியவருகிறது.

---

# அத்தியாயம் 6.

## மற்றைய வைணவக்கோயில்கள்.

### சக்கரபாணி கோயில்.

முற்காலத்தில் நம்மூரில் பிரமதேவர் காவேரியில் ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது மகாவிஷ்ணுவின் சக்ராயுதம், காலநேமி முதலிய அசுரர்களைக் கொன்றுவிட்டுவந்து அவர் கையையடைந்தது. உடனே நான்முகன் அதனை ஓர் அரசமரத்தடியில் ஸ்தாபித்துப் பூஜை செய்துவிட்டுச் சென்றார். இச்சமயம் சூரியன் ஒளியில் தனக்கு மேம்பட்டவர் இல்லை என்று, கர்வமடைந்தான். அவன் இறுமாப்புடன் உலகமெங்கும் சுற்றி வந்தான். அப்பொழுது நமது ஊருக்கும் வந்து சேர்ந்தான். இங்கே இச் சக்ராயுதம் ஒப்பற்ற ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தான்.

இதைக்கண்டதும் சூரியன் இன்னும் தன் பிரகாசத்தைப் பெருக்கிக்கொண்டான். சக்ரமும் அவ்வாறே செய்தது. சூரியனும் சக்ரமும் மாறுபட்டு ஒளியைப்

பெருக்கியதனால் உலகம் மூன்றும் உஷ்ணத்தால் எரிக்கப்பட்டன.

ஆகாசத்திலிருந்த தேவர்களெல்லாரும் சூர்யனிடம் வந்து, "கதிரவனே, நீ இப்படிப் போட்டிபோடுவது ஒழுங்கன்று. உனக்கு எதிர்நிற்பது சாதாரணமான சக்ரமன்று. அது மகாவிஷ்ணுவின் ஆழிப்படை. ஆகையால் உன் வெப்பத்தை அடக்கிக்கொண்டு மூவுலகத்தையும் காப்பாற்று" என வேண்டிக்கொண்டனர். ஆனால் சூரியன் தன் அகங்காரத்தைச் சிறிதும் ஒழித்திலன்.

உடனே அவர்கள் சக்ரத்தினிடம் சென்று "ஆழியான் ஆழியே, கதிரவன் தான் மதியிழந்தனன். அவன் உமக்கு ஒரு பொருட்டோ? அவனுடன் வாது செய்தாற்றா உமக்குப் புகழ்? அவன் உம்மைவிட எப்பொழுதாவது சிறந்தவன் ஆவானா? எங்கள் மீது அருள்கூர்ந்து உமது வெப்பத்தைத் தணித்தருளும், ஐயா" என்று வேண்டிக்கொண்டனர்.

கொடியார் மனம் கல்; சான்றோர் மனம் மெழுகன்றோ? அவர்களுடைய ஸ்தோத்திரத்திற்குத் திருச் சக்ரமும் இணங்கியது. கொஞ்சம் கொஞ்சமாகத் தன் ஒளியையும் வெப்பத்தையும் தன்னிடம் இழுத்துக்கொண்டது. அப்படிச்செய்ததில் கடைசியாகச்சூரியனுடைய ஒளியையும் ஒருங்கு சேர்த்து இழுத்துக்கொண்டுவிட்டது. சூரியன் ஒளியையிழந்தவனாய்க் கற்பலகைபோலாய்விட்டான். உலகம் முழுதும் க்ஷேமமடைந்தது. தேவர்கள் சந்தோஷமடைந்தார்கள். சூரியன் கர்வபங்கமடைந்தான்.



உடனே சூரியன் தன் பிரகாசத்தைத் திரும்பப் பெறும்பொருட்டுச் சாரங்கபாணியிடம் ஓடினான். அவரோ "ஓ கதிரவனே, நான் என்ன செய்வேன். நீ கர்வங்கொண்டாய். நம்முடைய சக்ரத்தையே எதிர்த்தாய். மானபங்கம் அடைந்தாய். இருக்கட்டும். சக்ரத்திலேயே நம்மை ஆவாஹனஞ்செய்து பூஜை செய். சக்ரதீர்த்தத்திற்கே போ" என்று ஏவினார். அவ்வாறே கதிரவனும் தவம் புரிந்து முடிவில் தன் ஒளியைப் பெற்றான்.

சூரியன் சக்ரத்தில் ஆவாகனம் செய்த தெய்வந்தான் சக்கரபாணி; சூரியனே இவ்வூரில் பாவவிமோசனம் அடைந்ததால் இவ்வூருக்குப் "பாஸ்கரக்ஷேத்ரம்" என்றும் ஒரு பெயர் உண்டானது. (பாஸ்கரன்=சூரியன்)

இனி இவ்வூரிலே ராமஸ்வாமிகோயில், வராகப்பெருமாள் கோயில், காவேரிக்குவடகரையிலுள்ள வரதராஜப் பெருமாள் கோயில் என்னும் மூன்று கோயில்களுள. ராமஸ்வாமி கோயிலில் ஸ்ரீராமர் சீதாபிராட்டியாருடன் எழுந்தருளியிருக்கிறார். ராமாயணகதை உங்களெல்லோருக்கும் தெரியுமாதலால் நான் அதைச் சொல்லவில்லை. ஆகையால் வராகப் பெருமாள் கோயிலில் வீற்றிருக்கும் வராகரின் அவதாரக்கதையைச் சுருக்கமாகச்சொல்லுகிறேன்.

முற்காலத்தில் ஹிரண்யாக்ஷன் என்ற ஓர் அசுரராஜன் இருந்தான். அவன் நமது பூமியையே பாய்போல் சுருட்டிச் சமுத்திரமத்தியில் ஒளித்துவைத்துவிட்டான். உடனே மகாவிஷ்ணு பன்றியுருவமெடுத்துக்கொண்டு, அங்கே சென்று, அவனைக்கொன்றுவிட்டுப் பூமியையும் திருப்பியெடுத்துவந்தார். பன்றிஎன்பதற்கு ஸம்ஸ்கிருத பாஷையில் வராஹம் என்று பெயர். ஆகையால் பெருமானை வராஹமூர்த்தி என்றழைப்பது வழக்கமாயிற்று.

காவேரிக்கு வடகரையிலுள்ள வரதராஜப்பெருமாள் கோயிலைப்பற்றி ஒரு கதை இருக்கிறது. முற்காலத்தில் பிராமணரொருவர் ஒவ்வொருநாளும் நம்மூரிலிருந்து புறப்பட்டுக் காஞ்சீபுரத்திற்குச் சென்று வரதராஜப்பெருமாளைத் தரிசித்து வருவது வழக்கம். தரிசனம் செய்யாவிடில் உணவு உட்கொள்ளமாட்டார். ஒருநாள் பகவான் இவருடைய பக்தியைச் சோதனை செய்வதற்காகக் காற்றையும் மழையையும் உண்டாக்கிவிட்டார். பிராமணர் தம் விரதத்திற்குப் பங்கம் வந்துவிடுமே என்று கதறியழுதார்.

பக்தர்கள் அழுதால் பகவான் சகிப்பாரா? உடனே பெருமாள் கச்சியிலிருந்து கருடாரூடராய்ப் புறப்பட்டு நம்மூர் வந்து இந்த அந்தணருக்குத் தர்சனம் தந்தருளினார். அந்த இடமே மேலைக்காவேரியிலிருக்கும் வரதராஜர் திருப்பதி.

இவ்வதிகாரத்தில் நாம் பார்த்த கோயில்களுள் எதுவும் ஆழ்வார் மங்களாசாஸநம் பெற்றதன்று. ஆகையால் இக்கோயில்கள் ஆழ்வார்களின்காலத்தில் இருந்தன என்பதற்கு ஆதாரமில்லை. வராகப்பெருமாள் கோயில் சிலவருஷங்களுக்கு முன்னே ஸ்ரீமான் ரங்கஸ்வாமி அய்யங்காரவர்களால் கட்டப்பட்டது. ராமஸ்வாமிகோவிலும் மற்றைக்கோயில்களும் நாயக்கர்மார் காலத்தில், அதாவது சுமார் 200-வருஷங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கலாம்.



# அத்தியாயம் 7.

## மகாமகம் என்னும் பெருந் திருவிழா.

இனி இவ்வூர் இந்தியாதேசம் முழுதும் பிரசித்தி பெற்றதற்குக் காரணமாயிருக்கின்ற மகாமகம் என்னும் மஹோத்ஸவத்தைப் பற்றிப் பார்ப்போம்.

முதல் அத்தியாயத்திலேயே அமுதம் தங்கிய வாவிகளில் ஒன்று மகாமககுளம் எனக்கண்டோம். இனி அம் மகாமக தீர்த்தத்தின் மஹிமையைப்பற்றிய கதையைக் கூறுவோம்.

முற்காலத்தில் சிவபெருமான் கைலையில் வீற்றிருக்கும்பொழுது ஒன்பது கன்னியர் அவர் முன்வந்து வணங்கினர். "நீங்கள் யார்" என்று அவர் வினவினார். அவர்கள் "ஸ்வாமி, நாங்கள் இவ்வுலகில் தாங்கள்படைத்தருளிய ஒன்பது மகாநதிகளே; இவ்வுருவத்துடன் வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். அவர் உடனே "ஏன் வந்தீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்:— "பகவானே, எங்களை மகாநதிகள் என்று நீங்கள் சிருஷ்டித்துவிட்டீர்கள். ஆகையால் உலகத்தில் பாவம் செய்கிறவர்களெல்லாரும் எங்களிடம் ஸ்நாநம் செய்து அப்பாவங்களையெல்லாம் எங்கள் தலையில் கட்டிவிடுகிறார்கள். நாங்கள் எங்கே நீக்கிக்கொள்வது ?"

உடனே பரமசிவனார் புன்னகை செய்து "தீர்த்த கன்னியரே உங்களுக்கும் ஒரு கதியுண்டு. கும்பகோணம் என்னுமூரில் அமுதவாவி யொன்றிருக்கிறது. அதில் நீராடியவரின் பாவம் பஞ்சாய்ப் பறந்துபோம். அவ்விடத்

தில் நாமும தேவியாரும் கும்பேசர் மங்களநாயகி என்னும் பெயர்களுடன் விளங்குகிறோம். பன்னிரண்டுவருஷங்களுக்கு ஒருதரம் ஸிம்மராசியில பிரகஸ்பதி சஞ்சரிப்பார். அவ்வருஷம் மாசிமாதத்தில்வரும மகமே மகாமகம். அன்றையதினம் நீங்கள் அவ்வமுதவாவியில் நீராடினால் உங்கள் பாவம் தீரும்'' என்று தைரியங்கூறினார்.

இதைக்கேட்ட நதி மடந்தையர் ''சுவாமி, எங்கள் மேலருள் கூர்ந்து தாங்களே எங்களை அவ்விடம் கூட்டிச் செல்லவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர். உடனே அவர் ''நீங்கள் காசிக்ஷேத்திரத்தில் போயிருங்கள். நாம் வந்து கூட்டிச்செல்லுகிறோம்'' என்றுரைத்தார். அப்படியே சிலநாட்களுக்கெல்லாம் இவர்களை அழைத்துச் செல்லப் பரமசிவனார் விசுவநாதர் உருவத்துடனும, அம்மை விசாலாக்ஷி உருவத்துடனும் புறப்பட்டனர். தீர்த்த கன்னியரும் பின் தொடர்ந்தனர்.

இவர்கள் இக்குடமூக்குவந்து சேர்ந்தவுடன் கும்பேசரும், நாகேசரும்கூட இவரை மகாமகக்குளக்கரைக்குப் பின் தொடர்ந்தனர். அன்றுதான் மகாமகம். அங்கே அவர்களுடைய திவ்விய சந்நிதியில் தீர்த்த கன்னியர் குளத்தில் ஸ்நானம் செய்து தங்கள் பாவத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

இக்காரணத்தால்தான் நாமும் பன்னிரண்டு வருடத்திற்கொருமுறை அந்தத் தீர்த்தத்தில் பக்தியுடன் நீராடுகின்றோம். மேலும் தன் பாவத்தைப் போக்கிக்கொள்ள கங்கையே இங்கு வருவதால், இங்கு அன்று ஸ்நானம்செய்தல் சுத்தமான கங்கையில் ஸ்நானம செய்தலைக்காட்டிலும் சிறந்த பயனைத் தரும என்பது தெளிவாகும்.



இவ்வூரில் மகாமகத் திருவிழா வெகுநாளைக்கு முன் தொடங்கியே பிரஸித்திபெற்றதாயிருக்கிறது. இதைத் தேவாரத்தில் வெகு இனிமையான திருநாவுக்கரசர் பாட்டொன்றால் அறியலாம்.

ஏவியிடர்க்கடலிடைப்பட்டு இளைக்கின்றேனை
யிப்பிறவியறுத்தேற வாங்கி யாங்கே
கூவியமருலகனைத்து முருவிப்போகக்
குறியிலறுகுணத்தாண்டு கொண்டார்போலுந்
தாவிமுதற்காவிரி நல்யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரி வருதீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங்கூத்தனாரே.

மேலும், 400-வருஷங்களுக்கு முன் கிருஷ்ணதேவராயர் என்ற ஒரு பெரிய அரசர் வடக்கே விஜயநகராஜ்ஜியத்தில் புகழுடன் ஆண்டுவந்தார். அவர் தாம், நாகலபுரம் சூரியபூஜை சரிவர நடக்கும்படியாக அவ்வூர்க்கோயில் கோபுரத்தைக்கட்டியவர். அவர் நம்மூர் மகாமகத் திருவிழாவின் சிறப்பைக் கேள்விப்பட்டு நமது ஊருக்கு வந்தனராம். (அப்பொழுதுதான் நாகேசர் கோயில் கோபுரத்தை நாகாலபுரம்கோயில் கோபுரத்தைப்போலக் கட்டியிருக்கலாம்.) அவர் நமது ஊருக்கு இத்திருவிழாவைக் குறித்தே விஜயம் செய்ததாக நாகாலபுரம் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டுச் சாசனத்திலிருந்து தெரியவருகிறது. அப்படியவர் வந்து போமபொழுது நமது ஊருக்குக் கிழக்கேயுள்ள குறறாலம் கோயிலுக்குச் சில மானியங்கள் விட்டாரெனவும் அதே சாசனம சொல்லுகிறது. இந்த நாகாலபுரச்சாசனம் வெட்டப்பட்டுச் சரியாக 400 வருஷங்களுக்கு மேல் ஆகிறது.

ஆனால் அக்காலத்தில் இக்குளம் தற்காலத்தில் இருப்பதுபோல் அவ்வளவு நாகரீகமாக இல்லை. குளத்தைச்சீர்திருத்தி நான்குபுறத்திலும் படித்துறைகளையும் மண்டபங்களையும் கட்டுவித்தவர் கோவிந்ததீக்ஷிதர் என்னும் பெரியவர் ஒருவர். அவருடைய சரித்திரத்தை விரிவாக மேல்வரும் அத்தியாயங்களில் காணலாம். இப்பொழுது இக்குளத்தைப்பற்றிமட்டும் அவரது சரிதையைக் கூறுவோம்,

தஞ்சாவூரில் முந்நூறு வருஷங்களுக்கு முன் அச்யுத நாயக்கரென்னும் ஓர் அரசர் ஆண்டுவந்தார். அவர் விஷ்ணு பக்தியிற் சிறந்தவர். அவர் விஷ்ணு ஆலயம் ஒன்று இவ்வூரில் கட்டுவதற்காகத் தம் மந்திரியான கோவிந்த தீக்ஷிதருக்கு ஏராளமான திரவியம் கொடுத்தார். தீக்ஷிதரோ சிவபக்தர். அவர் இந்த மகாமகக்குளத்தைச் சீர்திருத்த எல்லாத் திரவியத்தையும் செலவிட்டுவிட்டார். இச் செய்தியைக் கேட்ட அரசன் கோபங்கொண்டான். ஆனால் அவன் ராணியால் சினமாறியவனாய், இவ்வூர்வந்து மகாமகத்திருவிழாவைக் கண்டு களித்தான்.

அப்பொழுது தீக்ஷிதர் இவனை நோக்கி "நாம் விஷ்ணு திருப்பணியையும் கட்டி முடித்துவிடுவோம். நீங்கள் இந்தத் தீர்த்தக்கரையில் துலாபாரம் செய்துகொள்ளுங்கள்" என்று எடுத்துக்கூறினார். துலாபாரம் என்பது பின் கூறப்படுவதே. அரசனும் சம்மதிக்க கங்கைத் தீர்த்த மண்டபமென்னும் மகாமகக் குளக்கரையில் தீக்ஷிதரால் கட்டப்பட்ட ஒருமண்டபத்தில் ஒருபெரிய தராசு வைக்கப்பட்டது. அதன் ஒரு தட்டில் அரசன் உட்கார்ந்தான். மற்றொன்றில் சரியாக நாணயங்களும் தங்கமும் இடப்பட்டன. பிறகு அந்நாணயங்கள் பிராமணருக்குத்



தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டன. இம் மண்டபத்தை நீங்கள் போய்ப் பார்க்கலாம். அதில் துலாபாரச் சித்திரம் கூடச் செதுக்கப்பட்டிருக்கிறது.

துலாபாரம் செய்த மண்டபமாகையால் கும்பேசர் இன்றும் அதன்மேலல்லாமல் அதனருகிலிருந்து தான் மகமன்றைக்குத் தீர்த்தம் தந்தருளுவார்

---

# அத்தியாயம் 8.

## நமது ஊரின் பழைமை.

இப்பேரூர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். வெகுநாளைக்குமுன் நமது ஜில்லாவும் மேற்கேயுள்ள திருச்சிராப்பள்ளிஜில்லாவும் ஒரே அரசரால் ஆளப்பட்டுவந்தன. அவ்வரசர் வம்சத்திற்குச் சோழவம்சம் என்று பெயர். இவர் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே ஆண்டுவந்தனர். இதற்குப் பல சாக்ஷிகள் இருக்கின்றன.

ஸ்ரீராமர் வனவாசம்செய்யும்பொழுது ஸீதையை இழந்தாரென்று உங்களுக்குத்தெரியும். அவர் பலஇடங்களிலும் தேடித்திரிந்துவிட்டு கிஷ்கிந்தை வந்து ஸுக்ரீவனுடன் சிநேகம் செய்துகொண்டார். சுக்ரீவனும் ராமருடைய உதவியால் அரசனான பின்பு, எல்லா வானரர்களையும் கூப்பிட்டு எங்கெங்கே ஸீதையைத்தேடவேண்டுமென்பதைச் சொன்னார். அப்படிச்சொல்லும்பொழுது "வீரர்களே, நீங்கள் தண்டகாரண்யத்தில்தேடிவிட்டுக்கோதாவரிநதிக்கரையில் பாருங்கள். பிறகு ஆந்திரநாட்டிலும், புண்ட்ர நாட்டிலும், சோழநாட்டிலும், பாண்டியநாட்டிலும் மலை

பாளத்திலும் ஸீதா பிராட்டியாரைத் தேடுங்கள்" என்று கூறினார். இதிலிருந்து ஸ்ரீராமர் காலத்திலேயே சோழ நாடு பிரஸித்திபெற்றிருந்தது என்று தெரிகிறதல்லவா ?

இராமாயணத்தைப் போல மற்றொரு பழைமையான புஸ்தகத்தைப் பற்றியும் நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அது மஹாபாரதம். அதில், துர்யோதனன் என்ற ஒரு துஷ்டனுக்கும் தர்மபுத்திரர் என்ற ஒரு நீதிமானுக்கும் பெரியசண்டை நடந்தது. அதைப்பாரதப்போர் என்று சொல்லுவர். அந்தயுத்தத்தில் சோழராஜனொருவன் தர்மபுத்திரருக்கு ஜயம் வரும்வரை கூட இருந்து உதவி செய்தான்[1] என்று சொல்லப்படுகிறது. ஆகையால் சோழ மன்னர்கள் பலசாலிகளாகவும் இருந்திருக்கவேண்டும் என்பதும் ஏற்படுகிறதல்லவா ?

இச் சோழராஜ்ஜியத்தில் இவ்வூர் முக்கியமானதாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் இது பெயர்பெற்ற ஸ்தலம். இவ்வூரில் ஆதியிலிருந்து கும்பேசர் விளங்குகிறார். அவருக்குப் பிறகுதான் சாரங்கபாணி இவ்வூருக்கு வந்தார். இராமாயண காலத்திற்குப் பிறகு நம்மூருக்கு இப்பெருமாள் எழுந்தருளியிருக்கவேண்டும். ஏனெனில் விபீஷணாழ்வான் ஸ்ரீரங்கத்தில் வைத்துப்போனவிமானத்திலிருந்து பிரிந்துவந்தது சாரங்கபாணியின் விமானம் என ஏற்கனவே கூறியிருக்கிறோம். ஆதலின் சாரங்கராஜரின்விஜயம் ராமாயணகாலத்திற்குப் பிற்பட்டதாகும்.

இப்பொழுது, சிறு கிராமங்களாக இருக்குமிடங்கள் கூட, பெரியபட்டணங்களாக மாறிவிடுகின்றன. இதற்

1 "தாங்கள் பாரதமுடிப்பளவு நின்ற தருமன் தன்கடற்படை தனக்குதவிசெய்தவனும்"—கலிங்கத்துப்பரணி.



குப்பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு தாலுக்கா ஆபீஸோ ஒரு ரயில்வேஸ்டேஷனோ, ஒரு பெரிய பள்ளிக்கூடமோ வைத்துவிட்டால் கிராமம், பட்டணமாகச் சில வருஷங்களுள் மாறிவிடுகிறது. அக்காலத்திலோ அப்படியில்லை. ஒருகோயிலோ, நதிதீரமோ புண்ணியஸ்தலமோ இவைகளுள் ஏதேனும் ஒன்றே பலரையும் காந்தமிழுப்பதுபோல் இழுத்துவிடும். "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று ஔவையார் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கும். ஆகையால் சுவாமிதர்சனத்திற்காகப்பலரும் கோயிலுள்ள ஊரிலேயே வாஸஞ்செய்ய எண்ணங்கொள்ளுவார்கள். அப்படியேதான் பலபழைய பட்டணங்களும் உண்டாயிருந்தன.

அதற்கேற்றபடி கும்பேசரும் சாரங்கபாணியும் புண்ணியநதியான காவிரிக்கரையில் வீற்றிருக்க இதுபட்டணமாக மாறாமல் இருக்கமுடியுமா ? ஆகையால் குடமூக்கு மூவாயிரம் வருஷங்களுக்குமுன்னரே பெரியவூராக மாறி இருக்கலாம் என்பதில் சிறிதும் ஸந்தேஹம் இல்லை.

# அத்தியாயம் 9.

## காவிரி நதி.

தமிழ்ப் புலவர்கள் நிலத்தையே ஐந்து பிரிவாகப் பிரித்திருக்கின்றார்கள்.

கோலிய ஐந்திணைப் பேர் குறிஞ்சியே செறிந்தமுல்லை
பாலையே நெய்தலோடு பாசிய மருதமாமே.

அதாவது மலையும் அதைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும். காடும் அதைச் சார்ந்த இடமும்

முல்லை எனப்படும். நீரும் நிழலும் இல்லாத இடம் பாலை எனப்படும். கடலும் அதைச்சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். வயலும் அதைச் சார்ந்த இடமும் மருதம் எனப்படும்.

இவ்வைந்துபிரிவிலும் நமதுஊர் மருதத்தைச்சேர்ந்தது. அந்தக்காலத்திலிருந்தே நமது ஊரைச் சுற்றி மரங்களும் பயிர்களும் செழிப்பாக வளர்ந்தன. ஆகவே, நாயன்மார் "பொழில்சூழ் குடந்தை" என்றும் "சோலை சூழ்குடந்தை" என்றும் நம்மூரை வர்ணிப்பது வழக்கம். ஆழ்வார்களும் "செந்நெல் கவரிவீசும் செழுநீர் திருக்குடந்தை" என்று பாடியிருக்கிறதை முன்னொரு பாட்டிலேயே நீங்கள் கண்டிருக்கலாம். இதைப்போலவே பல இடங்களிலும் பாடியிருக்கின்றனர்.

இவ்வளவு செழிப்பாக நமது ஊர் இருப்பதற்கும் இருந்ததற்கும் காரணமான காவிரிநதியைப்பற்றிச்சிறிது ஆராய்வோம். இக்காவிரி பாய்ந்த இடமெல்லாம் பொன் கூட விளையக்கூடியதாக அவ்வளவு செழுமையாக இருப்பதால், இக்காவிரிக்குப் பொன்னி என்றபெயரும் உண்டு. பண்டைகாலத்துச் சிறந்த தமிழ்க்காப்பியமொன்றில்[1] காவிரி பின்வருமாறு புகழப்பட்டது:-

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பிற் கடுங்குரல் ஏற்றொடு
சூன்முதிர் கொண்மூப் பெயல் வளஞ்சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பஃறாரமொடு
கடல்வள னெதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்."

1 சிலப்பதிகாரம், நாடுகாண் காதை.



நமது நாட்டைப் பற்றியும் இந்நதியைக் குறித்தும் ஔவையாரே பின் வருவதைப் பாடியிருக்கிறாள்.

தண்ணீரும் காவிரியே, தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே.

மேற்சொன்னவைகளிலிருந்து காவிரியின் பெருமையை அறியலாம். இனி, காவிரி நம்மூருக்கு வந்ததைப்பற்றிய ஒரு சிறிய கதையைப் பார்ப்போம்.

இந்நதி ஆதிகாலத்தில் குடகில் உற்பத்தியாகி மைசூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளிவழியாக நமது ஜில்லாவுக்கு வந்தது. அப்பொழுது அரித்துவம்சன் என்ற சோழராஜனொருவன் இந்நதி வெகு அழகாக வருவதைப் பார்த்தான். உடனே அதன் வழியிலிருந்த மரங்களையும், புதர்களையும் மேடுகளையும் ஒதுக்கி அது சுலபமாக ஓடிவரும்படி செய்தான். அவனும் அவனுடைய மனிதர்களும் முன்னே சென்றனர். காவிரிபின்னே வந்தது.

இப்படி வந்த காவிரி நமது ஊருக்கு மூன்று மைல் மேற்கேயுள்ள திருவலஞ்சுழி வரையும் தடையில்லாமல் வந்தது. அவ்விடமிருந்து காவிரி நேரே செல்லாமல் கோவிலுக்குள்ளிருந்த பிலம் ஒன்றில் சுவாமியைப் பிரதக்ஷிணம் செய்து கொண்டு நுழைந்தது. வெள்ள நீர் முழுதும் அதனுட் புகுந்து விட்டது. சொட்டுக் கூட வெளிவரவில்லை.

சோழனுக்கோ வருத்தம் வந்து விட்டது. "ஐயோ, நாம் கொணர்ந்த காவிரி சமுத்திரத்தைப் போய் அடையவில்லையே. இங்கே ஒரு பொந்தில் நுழைந்து விட்டதே. சமுத்திரத்தைச் சேர்ந்தால் அல்லவோ இது புண்ணிய

நதியாகும்" என்று வருத்தப் பட்டான். உடனே அவன் யாராவது பெரியவர்களைக் கேட்டு இதன் காரணத்தை அறிய வேண்டுமென உறுதி செய்து கொண்டான்.

அக்காலையில் அருகிலிருந்த கிராம மொன்றில் ரிஷியொருவர் தவம் செய்து கொண்டிருந்ததாகத் தெரியவந்தது. அவர் பெயர் ஏரண்டர். அவரிடம் சென்று பணிந்து அரசனானவன் இப்படிக் காவிரி பரமசிவனை வலம் வந்து சுழித்துக் கொண்டு பிலத்துட் சென்றதற்குக் காரணம் என்னவென்று கேட்டான். (ஆகலால் அவ்வூருக்கு திருவலம்சுழி என்னும் பெயர் உண்டானது) அதற்கு அம்முனிவர் "அரசனே, அந்தப் பிலத்தினுள் யாராவது ஒரு மகாராஜனோ அல்லது பெரியவரோ சென்றால அது மூடிவிடும். காவிரி நேரே செல்லும்" என்றார்.

அரசனோ தயங்கினான். இதை ரிஷியானவர் அறிந்து கொண்டார். நற்காரியத்தைச் செய்ய யாராவது பெரியவர்களுக்குப் போதனை செய்யவேண்டுமா? என்றைக்கும் மனிதராய்ப் பிறந்தவர் இறக்க வேண்டும். அப்படி ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமல் இறபபதைவிட, உலகத்திற் பலருக்கும் நன்மை செய்யக் கூடிய விஷயத்தில் பிராணனை விடக்கூடாதா? என்று ஏரண்டமுனிவர் தாமே வலஞ்சுழிக்குச்சென்றனர்.

அங்கே தாமே பிலத்தின்மீது போய் உட்கார்ந்தார். உடனே அந்தப் பிலத்துள் சென்ற காவிரி முனிவரையும் தூக்கிக் கொண்டு சுவாமியை மறுபடியும் வலம் வந்து பில த்துட் சென்றது. பிறகு மூன்று மைலுக்கப்பால் காவி தலைதூக்கியது. காவிரி மேலெழுந்த இடமே மேலை காவேரி என இன்றும் அழைக்கப் படுகிறது. ஏரண்ட



திருவலஞ்சுழியில் பிலத்தினுள் சென்றதால், அவருடைய சிலையொன்று அக்கோயிலில் இருக்கிறது.

அதற்குப் பிறகு அரித்துவம்ச சோழன் வியப்பும் களிப்பும் அடைந்தவனாய், காவிரியைச் சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

இனி இச்சோழன் எப்பொழுது இருந்தான் என்பதை ஆராய்வோம். இவன் பாரதகாலத்திற்கு முன்னிருந்தவன் என ஒருபழைமையான தமிழ்க்கவியின் பாட்டிலிருந்து தெரியவருகிறது. அந்தக் கவியானவர் பின்வருமாறு சோழ வம்சத்தைப்பற்றிப் பாடியிருக்கிறார்[1]:

சிராதி என்பவன் சோழராஜர்களில் முதல்வன். அவன் சோழமண்டலத்தை ஏற்படுத்தியவன். வடக்கே வெகு தூரம் சென்று எல்லோரையும் ஜயித்து மேருமலையின்மீதே தன் கொடியை நாட்டியவன். அவனுக்குப் பின் வந்த சோழன் மகா நீதிமான். அவன் யமதர்மராஜனுக்கே நியாயம் அநியாயம் எடுத்துச் சொல்லக் கூடியவன். அவனுக்குப் பிறகு வந்த மூன்றாம் சோழனை

"காவிரிப் புனல் கொணர்ந்தவனும்"

எனப் புகழ்ந்திருக்கிறார். அவன் தான் நமது அரித்துவம்ச சோழனாக இருக்கவேண்டும். இந்த வம்சத்திற் பிறந்தபதினோராவதுசோழன் தருமபுத்திரர்க்குப்பாரதப் போரில் உதவியவன். ஆகையால் அரித்துவம்சன் பாரதப் போருக்குமுன் இருந்தான் என்பதற்கு ஐயமே இல்லை.

1 கலிங்கத்துப்பரணி—ராசபாரம்பரியம்.

# அத்தியாயம் 10.

## நமது ஊர் சோழராஜதானியா ?

ஒரு ராஜ்ஜியத்தில் அரசன் இருந்து ஆளும் இடத்திற்கு 'ராஜதானி' அல்லது 'தலை நகரம்' என்று பெயர். அங்கேதான் அரசனின் அரண்மனை, ஆபீசுகள், கச்சேரிகள் முதலியவை யிருக்கும். பழைய காலத்தில் ஆயிரம் வருஷங்களுக்கு மேல் நம்மையாண்டு வந்த சோழர்களுக்கு நம்மூர் ராஜதானியாக எப்பொழுதாவது இருந்ததா என்பதைக் கொஞ்சம் கவனிப்போம்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் சோழராஜ்யத்திற்குத் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே யுள்ள உறையூர் ராஜதானியாக இருந்தது. அக்காலத்தில் 'கரிகார்சோழன்' என்ற ஓர் அரசனிருந்தான். அவனுக்கு அப் பெயர் வந்ததற்குக் காரணமான சிறு கதை யொன்றைப் பார்ப்போம். இவன் இளமையிலேயே மிக்க பலசாலி. ஆகையால் இவனுக்குப் பகைவர்கள் அதிகமா யிருந்தனர். அவர்கள் இவனை எப்படியாவது கொன்று விடவேண்டுமென்று கெட்ட எண்ணங் கொண்டனர். ஆதலால் ரகசியமாக இவனைப் பிடித்து ஒரு சிறைச்சாலையினுட் போட்டு, அதற்கு நெருப்பையும் வைத்து விட்டனர். தன் பலத்தால் இவன் தப்பி வெளி வரும்பொழுது ஒரு காலில் தீப்பட்டுத் தீய்ந்து போய் விட்டது. ஆகையால் இவனைக் கரிகாலன் என ஜனங்கள் கூப்பிடலாயினர்.[1]

அவன் அரசனாய் மிக்க கீர்த்தியுடன் ராஜ்ஜிய பாரம் செய்து வந்தான். அக்காலத்தில் நமது தேசத்தாரிடையில் இரண்டாயிரம் மைல் தூரத்திலிருந்து வந்த வேற்று தேசத்தார்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சாமான்களைக் கடல் வழியாகக் கொண்டு வருவார்கள். காவிரி சங்கமத்திற்கு வந்து இறங்கி சாமான்களை உறையூர் முதலிய இடங்களுக்கு அனுப்புவார்கள். அக்காலத்தில் துணிகளை நேர்த்தியாக நெய்வதில் நம்மவரைப் போல ஒருவரும் இலர். ஆகையால் நமது நாட்டுத்துணிகளை யெல்லாம் அவர்கள் வாங்கிச்செல்லுவது வழக்கம்.

1 கரிகாலன் காலெருப்புற்ற — பொருநராற்றுப்படை.



இப்படி வியாபாரம் செய்வதற்குக் கரிகாற்சோழன் ராஜதானி கடற்கரை யோரத்திலிருப்பது மேலானது என்று நினைத்தான். ஆகையால் தலைநகரை காவிரியின் சங்கமத்தினருகில் மாற்றிவிட்டான். அதைப் புகார் என்றும் காவிரிப்பூம்பட்டினம் என்றும் வழங்குகிறார்கள். அதாவது காவிரி சமுத்திரத்தில் புகும் பட்டினம். ஆகையால் காவிரிப்பட்டினம் தலைநகராக மாறியது.

அந்தக்காலத்தில் காவிரியாறு ஆழமாக இருந்ததாகவும் சொல்லுகிறார்கள். ஒருசமயம் சிறுகப்பல்கள் காவிரி வழியாகப் போய்க்கொண்டிருந்ததாகவும் அறிகிறோம். நமது ஊரில் காவிரி ஐந்நூறு வருஷங்களுக்கு முன் மேட்டுத் தெரு, பிள்ளையார்கோவில்தெரு முதலியதெருக்கள் வழியாகச் சென்றதாகவும் தெரியவருகிறது. இன்றைக்கும் அந்தத்தெருக்களில் கிணறுவெட்டினால் ஆழ ஆற்றுமணல் அகப்படுகிறது.

அக்காலத்தில் காவிரிக்குப்பெரியகரைகள் கிடையா. வெள்ளம் வந்துவிட்டால் ஊருக்கே சேதம் வந்துவிடும். இதையறிந்த கரிகாலன் காவிரிஜலத்தை அடக்கிவிட

பெரிய அணைக்கட்டைத் திருச்சிராப்பள்ளிக்குப் பத்து மைல் கிழக்கே கட்டினான். அங்கேதான் வெண்ணாறு காவிரியிலிருந்து பிரிகின்றது. இரண்டுக்கு மடங்காமல் ஜலம் வந்துவிட்டால் அது வடியும்படி கொள்ளிடத்திற்கு ஒரு வாய்க்காலையும் அவ்விடமிருந்து வெட்டினான்.

இப்படிச் செய்ததுதவிர காவிரிக்கு அணைக்கட்டின் மேற்கிலிருந்தே பெரும் கரைகள் போடச் செய்தான். அப்படியெல்லாம் செய்ததால் ஜலம் கட்டுக்குட் பட்டுச் சரியாகப் பாய்ந்தது. விளைவு அதிகமானது. ஆகவே நமது நாட்டைப் "புனல்நாடு" என்றும் சோழனை "வளவர்" என்றும் கூப்பிடலாயினர். ஔவை "சோழவளநாடு சோறுடைத்து" என்றருளிச் செய்தனள்.

கரிகாலச்சோழனுக்குப் பிறகு சோழ அரசர்களில் ஆயிரம் வருஷங்கள் வரையில் பிரசித்திபெற்றவர் இலர். ஆயிரம் வருஷத்திற்கு முன்பு இருந்த சோழனொருவன் தஞ்சாவூரை ராஜதானியாக்கிக்கொண்டான். அவனுக்கு நூறு வருஷங்களுக்குப் பிறகு ஆண்டுவந்த மற்றொரு அரசன் "கங்கைகொண்டசோழபுரம்" என்பதைத் தலைநகரமாக்கிக்கொண்டான்.

ஆகையால் உறையூர், காவிரிப்பட்டினம், தஞ்சாவூர், கங்கைகொண்டசோழபுரம் முதலியன சோழராஜதானிகளாக இருந்திருக்கின்றன.

ஆனால் கும்பகோணம் தலைநகரமாயிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சோழராஜாக்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து உறையூருக்குப் போகும்பொழுது இவ்வூரில் தங்கியிருக்கலாம். அப்படித் தங்கியதும் அனேகமாய் நம்மூருக்கு மேற்கேயுள்ள "சோழமாளிகை" யில்



இருக்கலாம். ஒரு சோழன் நம்மூரில் வாசம் செய்வதற்காக ஊருக்குத் தெற்கில் ஒரு கோட்டையைக் கட்டினானாம். அதில் கிரகப்பிரவேசம் செய்யப்புறப்படும்பொழுது பட்டத்து யானையே இடறிவிழுந்துவிட்டது. பிறகு அது இறந்தும் போய்விட்டது. இந்த அபசகுனத்தைக் கண்டஞ்சிய சோழன் இதைச் சாவுக்கோட்டை என்று கூறிவிட்டுச் சென்றானாம். அதே தற்காலத்திய சாக்கோட்டை.

மேலும் வருடாவருடம் நிகழும் மாசி மகத்திற்கும் பனிரெண்டு வருடங்களுக்கொருமுறை வரும் மகாமகத்திற்கும் அவர்கள் வந்து தங்கியிருக்கலாம். வெகுநாளைக்கு முன் எழுதப்பட்ட செப்புப் பட்டயத்தில் தஞ்சாவூரை 'உறையூர் சிங்காதனத்துச் சாவடியான தஞ்சைமாநகரம்' என எழுதப்பட்டிருக்கிறது. அதேமாதிரி இவ்வூர் "தஞ்சைச் சிங்காதனத்துச் சாவடி" யாக இருந்திருக்கக் கூடும்.

---

# அத்தியாயம் 11.

## மூர்க்கநாயனாரின் கதை.

திருவேற்காடு என்று வடக்கே தொண்டை நாட்டில் ஒரூர் இருக்கிறது. அதில் வேளாளர் குலத்துத் தலைவராக ஒரு சிவபக்தர் இருந்தார். அவருக்குச் சிவனடியார்களை ஆராதிப்பதில் வெகு பிரியம். சிவபக்தியிலும் சிவனடியார் பக்திபெரிதென்பது அவருடைய கொள்கை. ஔவையாரே உலகத்தில் எது பெரிது என்பதற்கு விடையாகப் பின்வரும் பாட்டைப் பாடியிருக்கிறார்:—

"பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகனோ கரியமாலுந்தியில் வந்தோன்;
கரியமாலோ அலைகடல்துயின்றோன்;
அலைகடலோ குறுமுனியங்கையிலடக்கம்;
குறுமுனியோ கலசத்திற்பிறந்தோன்;
கலசமோ புவியிற்சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒருதலைப்பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல்மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்தொடுக்கம்;
இறைவரோ தொண்டருள்ளத்தொடுக்கம்;
ஆதலின், தொண்டர் தம் பெருமையைச்
சொல்லவும் பெரிதே."

ஆகையால் இவ்வேளாண் குலத்தொண்டர் சிவனடியார்களுக்கு அடியாராக விளங்கினர். இப்படி இருந்ததில் அவர் தம் பொருளை எல்லாம் செலவழித்துவிட்டார்.

வெகு சீக்கிரத்தில் அவர் ஏழையாகிவிட்டார். ஏழையானாலும் தம் கொள்கையை அவர் கைவிடவில்லை. சிவபக்தர்களுக்குப் பின்னும் அவர் தவறாது உணவளித்தார். இதற்குப் பொருள் சம்பாதிப்பதற்காக அவர் திருக்குடந்தைக்கு வந்தார். இவ்வூரில் சூதாட்டத்தால் பணம் ஏராளமாகச் சம்பாதிக்கலாம் என்று நினைத்து சூதாடத்தொடங்கினர். ஆட்டத்தில் யாராவது நியாயம் தவறினால் அவர் உடைவாளால் குத்திவிடுவார். ஆதலின் அவரை எல்லோரும் "மூர்க்கர்" என்று கூப்பிட்டனர்.

சூதாட்டத்தால் வந்த திரவியத்தால் அவர் சிவனடியார்களை உண்பித்தார். ஆதலின் இவரை "நற்சூதர்" என்



றும் கூப்பிட்டனர். அவர் இவ்வூரிலேயே சிவபதம் அடைந்தார்.

இவரைப்பற்றிச் சேக்கிழார் என்னும் கவி, தம் "பெரியபுராணத்தில்" பாடியிருக்கிறார். மூர்க்கநாயனர் சிவனடியார்களான அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரைப்பற்றித் தேவாரத்தைப் பாடியருளிய மூவரில் ஒருவரான சுந்தரமூர்த்திசுவாமிகளும் பாடியிருக்கிறார். ஆகையால் மூர்க்கநாயனர் 1300 வருஷங்களுக்கு முன் இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.

# அத்தியாயம் 12.

## கோவிந்த தீக்ஷிதர்.

### பாகம் 1.

சோழர்களுக்குப் பிறகு தஞ்சாவூரில் நாயக்கர் என்னும் ஒரு வம்சத்தார் ஆண்டுவந்தார்கள். அவர்களில் செவ்வப்பநாயக்கன் என்பவன் முதல்வன். அவன் 375 வருஷங்களுக்கு முன் பட்டத்திற்கு வந்தான். அவனுடைய புதல்வன் அச்யுதநாயக்கன். அவர்கள் காலத்தில் மந்திரியாக இருந்தவரே கோவிந்ததீக்ஷிதர் என்பவர். இவ்வத்தியாயத்தில் அவருடைய இளமைப்பருவத்தைப் பற்றிய ஒரு கதையைப்பார்ப்போம்.

மைசூர்ச் சீமையில் கொல்லாபுரம்என்ற ஒரூர் இருந்தது. அதில் இவருடைய பெற்றோர்கள் வசித்து வந்தார்கள். இவருக்குப் பத்துவயது நிரம்பும் முன் இவருடைய தந்தை இறந்துபோனர். ஆதரவற்றவளான இவர்

தாய் தன்னுடைய தாய்வீட்டிற்குப் புறப்பட்டாள். அவ ருடைய சகோதரர், ஆரணியில் பாளையப்பட்டாக இருந்த நாயக்கரிடம் தலைமை ராயஸவேலை பார்த்துவந்தார். தம் தாய் ஆரணிக்குப் புறப்பட கோவிந்தர் மட்டும் அங்கேயே தங்கிவிட்டார்.

அங்கே இவர் ஒருநாள் முழுதும் திக்கற்றவராய் பட் டினிகிடந்தார். அன்று ராத்திரி அவ்வூர் மகாலக்ஷ்மி கோயிலில் அநாதையாய்ப் படுத்துத் தூங்கிவிட்டார். தூங்கும்பொழுது மகாலக்ஷ்மியே அவர் கனவில் வந்து "குழந்தாய், பயப்படாதே நீ. நீயும் ஆரணிக்குப் போ. நான் உனக்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்கிறேன்" என்று சொல்லி மறைந்தாள்.

மறுநாட்காலையில் கோவிந்தர் எழுந்திருந்து ஆரணிக் குப் புறப்பட்டார். அக்காலத்தில் இப்பொழுது இருப் பது போல நல்ல ரஸ்தாக்கள் கிடையா. அக்காலத்து மார்க்கங்களெல்லாம் பொதுவாகக் காடுகளின் வழியே சென்ற ஒற்றைப் பாதைகளே. சிறு பையனான இவர் பசி யால் மெலிந்து களைத்துப் போய் ஒரு மரத்தடியில் படுத்தார்.

அப்பொழுது இவர் தலைக்கு மேலிருந்த நிழல் ஒதுங் கிப்போக, ஒரு பெரிய ஸர்ப்பம் தன் படத்தை விரித்துக் கொண்டு இவருடைய முகத்திற்கு நிழல் உண்டாக்கியது. அதை வழிப்போக்கனொருவன் கண்டான். அவனுக்கு ஜோதிஷம் தெரியும். உடனே அவன் "ஆஹா, இந்த பையனின் யோகமே யோகம். இவன் ஒரு நாள் அர சரோடு சரியாசனத்தில் அமர்வான் என்பதற்குச் சந்தேக மில்லை" என்று சொல்லிக்கொண்டே அருகில்சென்றனன்.



மனிதனைக் கண்டதும் நாகம் விலகினது. உடனே இந்த ஜோசியன் இவரைத் தட்டி யெழுப்பி "உனக்கு மகா யோகம் வரப் போகிறது. அக்காலத்தில் என்னை நினைத்துக்கொள். பசியால் களைத்துப் போயிருக்கிறாயே. இந்தா, இப்பொரி மாவைச் சாப்பிடு" என்று ஆதரவுடன் கொடுத்தான். கோவிந்தருக்கு ஆநந்தம் வந்து விட்டது. பொரி மாவைச்சாப்பிட்டார். பிறகு "நீங்கள் யார்" என்று வினவினார். அதற்கு அவன் "என்பெயர் காமாக்ஷிஜோசியன். என் ஊர் கும்பகோணம். நான் காசிக்கு யாத்திரையாகச் செல்கிறேன். நான் திரும்பி வந்து நீ உன்னத ஸ்திதியில் இருக்கும் பொழுது பார்க்கிறேன். ஞாபகமிருக்கட்டும்" என்று சொல்லி விட்டுச் சென்றான். கோவிந்தரும் சில நாட்களுக்கெல்லாம் சௌக்கியமாய் ஆரணி வந்து சேர்ந்தார்.

ஆரணியில் இவருடைய தாயும் மாமனும் இவரைக் கண்டு சந்தோஷமடைந்தார்கள். இவருடைய புத்திக் கூர்மையைக் கண்ட இவரது மாமன் இவருக்கு கல்வி கற் பித்தார். கோவிந்தர் சிலவருஷங்களுள் ஸம்ஸ்கிருத பாஷையில் மஹாவித்வானாகிவிட்டார். வேதங்களை அத் யயனம் செய்துமுடித்தார். சங்கீதத்திலும் அவர் தேர்ச்சி யுள்ளவராகி விட்டார்.

இவ்வளவு கல்விமானான தம் மருமானிடம் ராயஸ வேலை முழுதையும் இவர் மாமன் ஒப்பித்துவிட்டார். கோவிந்தரும் எல்லாவேலையையும் ஒழுங்காகப் பார்த்து வந்தார். கையெழுத்தைமட்டும் இவர் மாமன் போட வேண்டியது. இதையுணர்ந்த பாளையப்பட்டு ராயஸவேலை யை கோவிந்தய்யருக்கே கொடுத்துவிட்டார். அவரு டைய மாமனும் தம் மருமானுக்கு அவ்வேலையைக் கொடுத்

தில் மிகுந்த திருப்தியடைந்தார். பிறகு தம் ஒரே புதல்வியையும் அவர் கோவிந்தருக்கே விவாஹம் செய்து கொடுத்தார்.

இப்படிக் கோவிந்தய்யர் ஆரணி சமஸ்தானம் திவானாக இருக்கும் பொழுது, ஆரணி பாளையப்பட்டின் ஒரு மகளை தஞ்சாவூர் நாயக்கராஜனொருவன் மணஞ்செய்து கொண்டான். இப்பெண் தஞ்சைக்குச் செல்லும்பொழுது வேறு ஸ்திரீதனம் ஒன்றும் கேட்கவில்லை.' இவள் தன் தந்தையைப்பார்த்து "எனக்கு ஸ்திரீதனம்போல் இந்த கோவிந்தய்யரை அனுப்பு, அவரை அங்கே மந்திரியாக வைத்துக்கொள்ளுகிறேன்" என்றாள். பாளையப்பட்டும் அதற்கிசையவேண்டியதாயிற்று.

இவ்விதமாகவே ஆரணி சமஸ்தான திவானான கோவிந்தய்யர் தஞ்சை திவானாக வந்தார்.

---

# அத்தியாயம் 13.

## கோவிந்த தீக்ஷிதர்.

### பாகம் 2.

கோவிந்ததீக்ஷிதர் சுமார் 345 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் சமஸ்தான மந்திரியானார். அவர் காலத்திற்கு முன்பே சோழவம்சம் மூலமற்றுப் போய்விட்டதென்று சொல்லுகிறார்கள். தஞ்சாவூரில் 'நாயக்கர்' என்னும் மற்றொரு வம்சத்தார் ஆண்டுவந்தனர். அந்த வம்சத்தைச் சார்ந்த அரசர் நால்வர். அனேகமாய் கோவிந்த அய்யர் அவர்கள் நால்வருக்கும் மந்திரியாக இருந்தார் என்றே



சொல்லலாம். அதாவது அவர் சுமார் ஐம்பது அறுபது வருஷங்களுக்குத் திவானாக இருந்தார் என்பதே.

அவர் பல பெரிய கோயில்களைத் தென்னாடெங்கும் கட்டுவித்தார். ராமேசுவரத்திலும், ஸ்ரீரங்கத்திலும், விஜயராகவபுரத்திலும் நம்மூரிலுமுள்ள ராமஸ்வாமிகோயில்களைக் கட்டுவித்தவர் அவர். ராமஸ்வாமிகோயிலைக் கட்டக்கொடுத்த, திரவியத்தைத் தான் அவர் முதலில் மகாமகக்குளத்தைச் சீர்திருத்த உபயோகித்துவிட்டார். இலாபாரம் செய்தபின் கோவிந்த அய்யர் ராமஸ்வாமி கோயிலையும் கட்டிமுடித்தார். திருவண்ணாமலையிலுள்ள உயரமான கோபுரமும் ஆழமானகுளமும் அவரால்உண்டாக்கப்பட்டன. அவர் காலத்திலேயே சாரங்கபாணிகோயிலின் கோபுரமும் மதிற்சுவர்களும் கட்டப்பட்டிருக்கலாம்.

மேலும், புண்ணியஸ்தலங்களில் வீதிகள்கட்டி அவர் பிராம்மணர்களுக்குத் தானம்செய்தார். இவ்வூரில்உள்ள "அய்யன்தெரு"க்கள் அவரால்தானம்செய்யப்பட்டவையே. அக்காலத்தில் இவ்வூர்ச் சுடுகாடு காவிரியின் தென்கரையிலேயே இருந்தது. கோவிந்தஅய்யர் யாகங்கள்செய்யக் கருதி தென்கரையிலிருந்த மயானத்தை வடகரையில் கொண்டுபோய் போட்டார். பிறகு அந்த இடத்தில் அநேக யாகங்கள் போற்செய்தார். ஆகையால் இன்றும் அத்தெருவை யாகசாலைத்தெரு என்று அழைக்கிறோம்.

இப்படி யாகங்கள் பல செய்தமையால் அவருக்குக் கோவிந்தஅய்யர்என்னும் பட்டம்மாறி, கோவிந்ததீக்ஷிதர் கோவிந்தமகி, கோவிந்தயஜ்வா என்றழைக்கப்பட்டார். அந்த யாகசாலைத் தெருவிலேயே நீங்கள் ஒரு வேதபாடசாலையைப் பார்க்கலாம். அந்தப்பாடசாலையை ஏற்படுத்

தியவர் அவரே. அதற்கு அவர் ஏராளமான மூலதனம் வைத்திருக்கிறார். இன்னும் அந்தத் தருமம் நடந்துவருகிறது.

இச்சமயத்தில் காமாக்ஷிஜோசியர் காசி யாத்திரை செய்துவிட்டுத் திரும்பினார். அவர் கோவிந்ததீக்ஷிதரின் பெயரைக் கேள்விப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்தார். தீக்ஷிதரும் அவரை ஆதரித்து என்ன வேண்டுமென்று கேட்டார். உடனே ஜோசியர் "ஐயா, என்பெயர் என்றும் மறவாதிருக்கும்படி ஒரு தெருக்கட்டி பிராமணருக்குத் தானம் செய்யவேண்டு" மென்றார். தீக்ஷிதரும் அதற்கிணங்கினார். அவ்வாறு உண்டானதே காமாக்ஷி ஜோசியர்தெரு.

இவைகளைத் தவிர, அவர் நமது ஜில்லா முழுதிலும் பல கோவில்களையும்; குளங்களையும், தெருக்களையும் கட்டியிருக்கிறார். தஞ்சாவூரிலுள்ள 'அய்யன்குளம்' 'அய்யன் வாய்க்கால்' முதலியன அவர் வெட்டுவித்தனதாம். மாயவரத்தில் "மகாதானத்தெரு" வும் அவரால் தானம் செய்யப்பட்டதே. நமது ஊருக்கும் தஞ்சாவூருக்கும் மத்தியிலிருக்கும் 'அய்யன்பேட்டை' அவரால் சந்தை கூடுவதற்காக உண்டாக்கப்பட்ட ஊரெனவும் தெரிய வருகிறது.

திருவையாறு முதல் சங்கமம் வரையுள்ள காவிரி யாற்றின் புஷ்யமண்டபப் படித்துறைகள் அவரால்கட்டப் பட்டன. நமது ஊரில் சக்கரப்படித்துறையே புஷ்ய மண்டபப் படித்துறை போலும். அதைக் கட்டியவரும் தீக்ஷிதரே.



அவர் காலத்தில் பாண்டியராஜனொருவன் கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணையைக்கொஞ்சம் இடித்துவிட்டான். உடனே தீக்ஷிதரானவர் அதை மறுபடியும் சரியாகக் கட்டினார். ஒருசமயம் திருச்சியில் ஆண்டுவந்த அரசனொருவன் "இக்காவிரிநதியால் அல்லவோ தஞ்சைஜில்லா செழிப்பாயிருக்கிறது. இந்த நதி ஜலத்தைத் தஞ்சைக்கு விடாவிட்டால் என்ன செய்வார்கள் பார்க்கலாம்" என்று பொறாமையோடு கூறினான். இதைக் கேட்ட தீக்ஷிதர் "காவிரி ஜலத்தைத் தான் அடைக்கலாம், கார்த்திகைக் கடக சந்திர யோகத்தையும் அடைக்கமுடியுமோ?" என்றாராம்.

கோவிந்ததீக்ஷிதர் ஸம்ஸ்கிருதத்தில் பெரிய புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய 'ஹரிவம்சஸாரம்' என்பதற்கு ஸ்ரீமான் அப்பையதீக்ஷிதர் என்னும் பெரியவரே வியாக்கியானமெழுதியிருக்கிறார். கோவிந்ததீக்ஷிதர் ஸங்கீதசாஸ்திரத்திலும் நிபுணர். அவர் எழுதிய "ஸங்கீத ஸுதாநிதி" என்னும் புஸ்தகம் ஸங்கீத வித்வான்களால் போற்றப்பட்டு வருகிறது. இப்பொழுது உபயோகிக்கிற 21 தந்திகளுடன்கூடிய வீணை அவரால் செய்யப்பட்டது. அதற்குமுன் வீணைக்கு 53 தந்திகள். ஆகையால் தீக்ஷிதர் ஸகல கலாவல்லவர் என்பது தெளிவாகும்.

தீக்ஷிதர் பட்டீசுவரத்தில் வசித்துவந்தார். அங்கிருந்து அவர் தினம் பல்லாக்கில் தஞ்சாவூருக்குப்போவதுவழக்கமென்றும்சொல்லுகிறார்கள். இன்றைக்கும் தாம்கட்டுவித்த பட்டீசுவரம் கோவிலில் அவர் உருவச்சிலையும் அவர் பத்தினியின் உருவச்சிலையும் அம்மன்சந்நிதியில் இருக்கின்றன. கும்பேசர் கோயிலிலும் அம்மன் சந்நிதியில் வடக்கு மூலையில் அவர்கள் சிலைகள் இருப்பதாகத் தெரியவருகிறது.

அவர் மகாசிவபக்தர். இவ்வூரில் சிவபூஜைக்கு வில்வம் இல்லாததைக்கண்டு 10000வில்வமரங்களை இவ்வூரின் தென்கிழக்கு மூலையில் வைத்துப் பயிர்செய்தார். அவ்விடத்தையே நாம் இன்றும் "மகாதளம்பேட்டை" என்று வழங்குகிறோம்.

இவருடைய குமாரர்களில் பிரஸித்தி பெற்றவர்கள் இருவர். மூத்தவரான யஞ்ஞநாராயணர் நாயக்கவம்சத்தாரின் சரித்திரத்தை "ஸாஹித்யரத்னாகரம்" என்னும் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். அதிலிருந்துதான் கோவிந்ததீக்ஷிதரைப்பற்றி பல செய்திகளை அறிகிறோம். இளையவரான வேங்கடேசமகி என்பவர் நீலகண்டதீக்ஷிதர் என்னும் பெரியவருக்கு குருவாக இருந்தவர்.

---

# அத்தியாயம் 14.

## ஸ்ரீமத் சங்கராசாரியாரின் மடம்.

பாகம் 1.

நமதுஊரில் 'மடத்துத்தெரு' என்றொரு தெருவிருப்பது உங்களுக்குத் தெரியும். அதில் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளின் மடம் இருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். இந்த அத்தியாயத்தில் சங்கராசார்யார் யார் என்றும், அடுத்த அத்தியாயத்தில் இவ்வூர் மடம் எப்படி ஏற்பட்டது என்றும் பார்ப்போம்.

ஆயிரம்வருஷங்களுக்குமுன் நமது தேசத்தில் இந்து மதமே நாசமாய்விடும்போல் இருந்தது. வேறுமதங்கள் கிளம்பின. வர்ணாசிரமதர்மங்கள் சீர்குலைந்தன. அப்படிப்



பட்ட சமயத்தில் பரமசிவனே ஸ்ரீமத் சங்கராசார்யார் என அவதரித்தார். அவருடைய தந்தையின் பெயர் சிவகுரு. அவருடைய தாயின் பெயர் ஆர்யாம்பாள். இவர்கள் மலையாளத்தில் காலடி என்னும் கிராமத்தில் வசித்துவந்தார்கள்.

சிலநாட்களுக்குப் பிறகு சங்கரரின் தகப்பனார் சிவனடி சேர்ந்தார். ஆகையால் இவருடைய தாயே இவரை வளர்த்துவரும்படியாக நேர்ந்தது. குழந்தையோ நாளுக்கு நாள் வளர்பிறைச் சந்திரன்போல அதிக காந்தியுடன் விளங்கினார். குழந்தைக்கு உபநயனமாகிவிட்டது. உபநயனமானபின்னர் இவருக்குச் சந்நியாசம் வாங்கிக்கொள்ள விருப்பம். ஆனால் சந்நியாசம் வாங்குவதற்கு அன்னை அனுமதி கொடுக்கவில்லை.

ஆகையால் சங்கரர் ஒரு தந்திரம் செய்தார். ஒரு நாள் இவர் தாய் இவரை 'ஆல்வாய்ப்பிழை' என்னும் ஆற்றிற்குக் கூட்டிச் சென்றாள். அங்கே இறங்கி ஸ்நாநம் செய்யும்பொழுது ஒரு மாயமுதலையைச் சிருஷ்டித்துத் தம் காலைப்பிடித்துக்கொள்ளும்படி இவர் ஏவினார். முதலையோ பிடித்துக்கொண்டுவிட்டது. சங்கரரோ துடிக்கிறார். தாயோ கதறுகிறாள். அப்பொழுது சங்கரர் தம்தாயைப் பார்த்து "அம்மையே, சந்நியாசிகளை முதலை பிடிக்காது என்று சொல்லுகிறார்கள். சந்நியாசம் வாங்க நீ உத்தரவு அளிப்பாயானால்ஒருவேளை நான் தப்பிப்பிழைக்கலாமென தோன்றுகிறது" என்றார்.

கதறிக்கொண்டிருந்த ஆர்யாம்பாள் "மைந்த! சந்நியாசமாவது வாங்கிக்கொள், நீ உயிருடன் இருந்தால் போதும்" என உத்தரவளித்தாள். மாயமுதலை மறைந்து

போய்விட்டது. கரையேறியதும் சங்கரர் காவியுடை தரித்துச் சந்நியாசம் பூண்டார்.

இதற்குப் பிறகு அவர் நர்மதைநதிக் கரை சென்று அங்கே கோவிந்தபகவத்பாதர் என்னும் துறவியிடம் சிஷ்யராக அமர்ந்தார். அங்கே அவரிடமிருந்து அத்வைத வேதாந்தம் என்னும் சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டார். பிறகு தாம் எல்லோருக்கும் அந்த வேதாந்தத்தைக் கற்றுக்கொடுத்து, அஞ்ஞானத்தை நீக்க முயன்றார். ஆகையால் அவர் நமது தேசமெங்கும் யாத்திரை செய்யலானார். அப்பொழுது அவருக்கு பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் என்பவர் சிஷ்யர்கள் ஆயினர்.

முதலில் கைலைமலைக்குச் சென்று பரமசிவனாரைக் கண்டு தரிசித்துவிட்டு காச்மீரதேசத்திற்குச் சென்றார். அங்கே மண்டனமிசிரர் என்னும் ஒரு பெரும் வித்வானுடன் வாக்குவாதம் செய்து வென்றார். மண்டனமிசிரரே பிறகு சங்கரரின் சிஷ்யரானார். ஆனால் மண்டனமிசிரரின் மனைவியான ஸரஸ்வதியென்பவள் கலைமடந்தையின் அவதாரமாகையால் அவளை வெல்வது சங்கரருக்குச் சுலபமாக இருக்கவில்லை. அந்தமாதும் வெற்றிகொண்ட சங்கரருக்கு ஆசிகள் கூறிவிட்டுத் தன் உலகம்போய்ச்சேர்ந்தாள்.

பிறகு தம்மதம் பரவுதற்காக சங்கரர் அங்கங்கே மடங்கள் ஏற்படுத்தினார். முதல் முதல் மைசூர்ச் சீமையிலுள்ள சிருங்கேரியில் சாரதாபீடம் என்னும் மடத்தை ஏற்படுத்தி அங்கே தம் சிஷ்யரொருவரை அமர்த்தினார். அங்கிருந்து கங்கைக்கரை சென்று பதரியில் ஒருமடத்தையும் மேற்கே வந்து துவாரகையில் மற்றொன்றையும், கிழக்கே ஜகந்நாதத்தில் ஒன்றையும் ஏற்படுத்திவிட்டுத் திரும்பினார்.



இம்மாதிரி இந்தியாவில் நாலுபக்கங்களிலும் மடங்களை ஏற்படுத்தி எல்லா மனிதர்களையும் நீதிநெறியில் கொண்டுவந்துவிட்டார்.

பின்னர் அவர் காஞ்சீபுரத்திற்கு வந்தார். அங்கே காமாக்ஷி அம்மன் விக்கிரகம் வெகு கோபக் குறியுடன் இருப்பதுபோல் தோன்றியது. உடனே சங்கரர் தம் மந்திரசக்தியால் அக்கோபக்குறியைச் சாந்தமுறச் செய்தார். பிறகு அவ்வூரில் காமகோடி பீடம் என்னும் பெயர் பூண்ட மடத்தை ஸ்தாபித்தார். அந்தப்பீடத்தில் தாமே முதல் ஆசார்யபுருஷராக விளங்கினார்.

அப்பொழுது காஞ்சீபுரத்தில் அரசராக இருந்தவர் அவ்வூரையே சீர்திருத்தம்செய்து ஸ்ரீமத் சங்கராசாரியருக்கு ஒரு மடத்தையும் கட்டுவித்துக்கொடுத்தார். இதனால் காஞ்சீபுரம் கல்விக்கே இருப்பிடமாயிற்று. பல வித்வான்களும் அங்குவந்து அநுக்கிரகம்பெற்றுப்போயினர்.

இவ்வண்ணம் நிலை குலைந்துபோன நமது ஹிந்து மதத்தை எங்கும் நிலைபெறுமாறு செய்துவிட்டுத் தமது முப்பத்திரண்டாவது வயதில் சங்கரபகவத்பாதர் மறைந்தருளினார்.

---

# அத்தியாயம் 15.

## ஸ்ரீமத் சங்கராசாரியார்மடம்.

### பாகம் 2.

சென்ற அத்தியாயத்தில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதரின் சரித்திரச்சுருக்கத்தைப் பார்த்தோம். அதில் அவர் சிருங்கேரி, காஞ்சீ முதலிய ஐந்து இடங்களில் மடங்களை

ஏற்படுத்தினதாகவும் கண்டோம். அப்படியிருக்க நம்மூரில் எப்படி ஒருமடம் ஏற்பட்டது என்பதை இப்பொழுது விசாரிப்போம்.

காஞ்சீபுரத்தில் ஏற்படுத்தப்பட்ட மடம்வெகு காலம் வரைக்கும் அங்கேயே இருந்தது. அங்கிருந்த பல அரசர்களும் அதற்குப்பல சௌகர்யங்களைச்செய்து வந்தார்கள். நானூறு வருஷங்களுக்கு முன் தென்னிந்தியாவில் விஜயநகரத்தைத் தலைநகராகக் கொண்ட ராஜ்ஜியமொன்று விளங்கியது. அந்த ராஜ்ஜியத்து அரசர்கள் தென்னிந்தியா முழுவதையும் தங்களாணைக்காளாக்கிக் கொண்டார்கள். நமது தஞ்சாவூர் ஜில்லாவும் அவர்களின் கீழிருந்தது. அந்த வம்சத்தைச் சார்ந்த வீரநரஸிம்ஹ தேவர் என்னுமரசர் காஞ்சீபுரம் மடத்திற்குப் பல மானியங்கள் விட்டிருக்கிறார். இன்றைக்கும் அவைகளைத் தானம் செய்துகொடுத்த மூலசாசனங்களான செப்புப் பட்டயங்கள் இருக்கின்றன. அவைகள் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருக்கின்றன. அப்படி மானியம் விடப்பட்ட கிராமங்கள் செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கின்றன.

நரஸிம்மதேவருக்குப் பிறகு மண்டலாதிபதியாய் விளங்கிய கிருஷ்ணதேவராயர் என்னும் விஜயநகர வேந்தரும் பல கிராமங்களை மானியமாக விட்டார். அவர் விட்ட கிராமங்களான காட்டுப்பட்டு, உதயம்பாக்கம் முதலியனவும் செங்கற்பட்டு ஜில்லாவிலிருக்கின்றன. ஆகையால் அப்போது காமகோடிபீடத்திற்குப் பொருட்குறை கிடையாது.



விஜயநகர அரசர்களே இம்மடத்தை ஆதரித்துவந்ததால் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசரும் இதையாதரிக்கத்தொடங்கினார்கள். மடத்துக்காரியஸ்தர் ஒருவர் மடத்துக்காரியமாக இத்தென்னாட்டிற்குவந்தார். இங்கே புதுக்கோட்டைத் தொண்டமான் அவரைச் சிறப்புடன் நடத்தியதாக ஒரு செப்புப் பட்டயத்திலிருந்து தெரிய வருகிறது. அந்தச் செப்புப்பட்டயம் எழுதப்பட்டு 230 வருஷங்களுக்கு மேலாகிறது. அது எழுதப்பட்டது விஜயரகுநாததோண்டமானின் காலத்தில். மடத்துக்காரியஸ்தரின் பெயர் பணிவேங்கடகிருஷ்ணய்யர். இந்தப் பட்டயத்தில் இரண்டுபாகங்களைநாம்பார்ப்போம். முதற்பாகத்தில் விஜயநகர அரசர்களின் பெரும்பிரதாபம்சொல்லப்படுகிறது.

"ஸ்வஸ்தி ஸ்ரீ மகாமண்டலேசுவரன், எம்மண்டலங்கொண்டு ஏழமுந்திறைகொண்ட ராஜாதிராஜன், ராஜமார்த்தாண்டன், ராசகண்டரவன், ராசாக்கள் தம்பிரான் கோட்டத்து மன்னியர் கண்டன், சோரிமன்னியர் சூரியன், கெடிமன்னியர் காலாந்தகன், துங்காபிராமன் துர்கரேபந்தன், படைகண்டு தரிப்பார்கள் மிண்டன், பஞ்சபாணவதாரன், தற்காற்குத்தற்கன், தற்கவிநோதன், தண்டுவார்மிண்டன், சண்டபிறசண்டன், துங்காபிராமன், துர்கரேபந்தன், பூர்வ தக்ஷிண [illegible] உத்திர சப்தசமுத்ராதிபதி, அசுவபதி, கஜபதி, [illegible] ராச்சியம்பண்ணியருளா நின்ற [illegible]
1613........................

இப்பட்டயத்தின்பின் [illegible] கவனிக்கவேண்டிய[illegible] விஷயமொன்றிருக்கிற[illegible] அதில் ஒருவரும் [illegible]

தர்மத்திற்குக்கெடுதல் நினைக்காமலிருக்கும்படிவேண்டிக் கொள்ளப்படுகிறது. அதைப்பார்ப்போம்

"இந்தத்தர்மத்திற்கு யாதாமொருத்தன் தடைபண்ணினாலும், பங்கம் பண்ணினாலும், காசியிலே கங்கை கரையிலே காராம் பசுவை கொன்னவன், பிரம்மஹத்தியைஸ்திரீஹத்தியை பண்ணினவன் எந்தத்தோஷத்தில் நரகத்தில் அனுபவிப்பானோ அந்ததோஷம் அனுபவிப்பானாகவும்........இந்தந்தர்மம் யாதா மொருத்தர் விளங்க நடப்பிக்கிறார்களோ அவர்களுக்கு ஆயிரத்தெட்டுசிவாலயம் அக்கிரஹார சத்திரங்கள் பண்ணின பலனுண்டாய் சிரஞ்சீவியாய் புத்திர பவுத்திராதி சம்பத்தோடே யிருப்பார்கள்.............. பெரியநாயகி அம்மன் துணை."

இப்படிக் காஞ்சீபுரத்தில் புகழுடன் இருந்து வந்த மடத்திற்கு, 150 வருஷங்களுக்கு முன் ஒரு பெருங்கஷ்டம் நேர்ந்தது.விஜய நகாராஜ்ஜியம் க்ஷீணதசை யடைந்து விட்டது. மகமதியர்கள் வலுத்துவிட்டனர். வடக்கேயிருந்து மகமதியர் கூட்டம் கூட்டமாகவந்து ஹிந்துக்கள் கோயில்களை யிடிப்பதும், ஹிந்துக்களைத் துன்பப்படுத்துவதுமாக இருந்தார்கள். அவர்கள் மடத்தையும் தொந்தரவுசெய்ய ஆரம்பித்தனர். சுவாமிகளின்பூஜைக்கு இடையூறு நேரிட்டது. ஆகையால் அவர் மகமதியர் உபத்திரவமில்லாத வேறு ஊரில்போய் வசிக்க எண்ணங் கொண்டார்.

அப்படியே அப்பொழுதிருந்த சங்கராசார்யஸ்வாமிகள் தம் பரிவாரங்களுடன் புறப்பட்டுத் தெற்கு நோக்கி வந்தார். அவரை அப்பொழுது உடையார் பாளயம் ஜமீன் எதிர்கொண்டு அழைத்துத்தம் ஊருக்குக் கூட்டிச்



சென்றார். அவ்வூரின் ஜலக்கஷ்டத்தை யறிந்த சுவாமிகள் அவ்வூரில் வெகு நாட்கள் வாசம் செய்யவில்லை. இச்சமயம் தஞ்சாவூரில் பிரதாபஸிங் என்றொரு மராட்டிய அரசர் ஆண்டுவந்தார். அவர் சுவாமிகளைத் தஞ்சைக்கு எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார். சுவாமிகளும் அவ்வாறே செய்தார்.

சுவாமிகள் எழுந்தருளியபின் தஞ்சாவூரில் ஒருமடம் கட்டப்பட்டது. அப்பொழுதே காமாக்ஷி அம்மன் கோயிலும் அங்கே கட்டப்பட்டது. ஆனால் சுவாமிகளுக்கு அங்கேயும் வசிக்க இஷ்டமில்லை. என்றாலும் எண்பது வருஷங்களுக்கு மடம் அங்கேயே யிருந்தது. அக்காலத்தில் தஞ்சாவூரில் டபீர் பண்டிதர் என்பவர் மந்திரியாக இருந்து வந்தார். அவருடைய தூண்டுதலின் பேரிலும், சுவாமிகளின் விருப்பத்தின்பேரிலும் காவிரிக்கரையோரத்தில் இவ்வூர் மடம் கட்டப்பட்டது. ஆகையால் சரபோஜி மகாராஜாவின் காலத்தில் சுவாமிகள்நம்மூருக்கு எழுந்தருளினார்.

சுவாமிகள் நமது ஊருக்கு வந்த தேதியை மடத்திலுள்ள ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. அது ஸம்ஸ்கிருதத்தில் இருக்கிறது. ஆனால் அதை மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்;

"ஸ்ரீ சந்திர மௌளீசுவரசுவாமியின்
வாஸத்திற்காக இந்த மடம் மகாராஜா
சரபோஜியினால் சாலிவாஹன சகாப்தம்
1743, விஷு வருஷம், மாசி பஞ்சமி
ஞாயிற்றுக்கிழமையன்று பிரதிஷ்டை
செய்யப்பட்டது"

இப்பொழுது நடக்கும் வருஷம் 1924 என்று உங்களுக்குத் தெரியும். இதைக் கிறிஸ்தவ வருஷம் என்று சொல்வது. சாலிவாகன வருஷம் இதில் 78 குறைந்தது. ஆகையால் சாகவருஷம் 1743 என்றால் கிறிஸ்தவவருஷம் 1743+78 அதாவது 1821. ஆகவே நம்மூர் மடம் கட்டப்பட்டு நூறு வருஷங்களுக்குமேல் ஆகிறது.

இதுவரையிற் சொல்லப்பட்டவைகளால் "காஞ்சியிலிருந்த காமகோடி பீடமே நம்மூரிலிருப்பது. இந்தக் காமகோடி பீடத்தில்தான் ஜகத்குரு ஆதி சங்கராசாரியார் தாமே வீற்றிருந்தது. ஆதலின் மற்றெல்லாப் பீடங்களையும்விட இது சிறந்ததாகும்" என்பது தெளிவாகும்.

---

## அத்தியாயம் 16.

### கொட்டையூர்.

கொட்டையூர் மேலக்காவேரிக்கு மேற்கே சுவாமிமலைக்குப் போகிற சாலையின் அருகில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த ஊருக்கு 'கொட்டையூர்' என்னும் பெயர்வந்ததிற்குக் காரணமொன்றுண்டு. திருவலஞ்சுழியில் காவேரி பிலத்துட் சென்றபோது சோழமகாராஜர் தம் துயரத்தைத்தீர்த்துக்கொள்ளஒரு பெரியவரிடம் வந்தார் என்று சொன்னோம். அவர்பெயர் ஏரண்டரிஷி என்பதும் நீங்கள் அறிவீர்கள். அந்த ரிஷியானவர் இந்த ஊரில் ஓர் ஆமணக்குச் செடி அதாவது கொட்டைமுத்துச் செடியின் கீழ் தவம்செய்துகொண்டு, வெகுகாலம் இருந்தார். ஆகையால் இவ்வூருக்குக் கோட்டையூர் என்னும் பெயர் வரலாயிற்று.



கொட்டையூரில் கோடீசுவரர்என்னும் திருநாமத்துடன் சிவபெருமான் வீற்றிருக்கிறார். இவரைப்பற்றித் திருநாவுக்கரசர் ஒருபதிகம் (அதாவது பத்துப் பாட்டுகள்) பாடியிருக்கிறார். ஆதலின் இதுவும் பாடல்பெற்ற ஸ்தலம். இப்பதிகத்தில் அநேகமாய் ஒவ்வொருபாட்டிலும் திருவலஞ்சுழியும் சேர்த்துப் பாடப்படுகிறது. உதாரணமாக ஒரு பாட்டைமட்டும் இங்குப் பார்ப்போம்.

"கலைக்கன்று தங்கு கரத்தான் கண்டாய்;
கலை பயில்வோர் ஞானக்கண்ணான் கண்டாய்;
அலைக் கங்கை செஞ்சடை மேலேற்றான் கண்டாய்;
அண்ட கபாலத்தப் பாலான் கண்டாய்;
மலைப்பண்டம் கொண்டு வருநீர்ப் பொன்னி,
வலஞ்சுழியன் மேவிய மைந்தன் கண்டாய்;
குலைத்தெங்கஞ் சோலை சூழ்கொட்டையூரிற்
கோடீசரத்துறையுங் கோமான்றானே."

சற்று ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கு முன் இவ்வூரில் ஒரு பெரியவர் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். அவர்பெயர் லக்ஷ்மிநரஸிம்மவாஜபேயர். அவர் பல யாகங்கள் செய்தவர். ஒரு சமயம் அவர் தஞ்சாவூர் ஸமஸ்தானத்திற்குச் சென்றார். அங்கே ராஜாவானவர் "பெரியவரே, உங்களுக்கு எந்தக்கலைகளிற் பயிற்சியுள்ளது? தயவு செய்து சொல்லுங்கள்." எனக்கேட்டார். அதற்கவர் "மகாராஜாவே, எனக்கு ஸிம்மநாதம் செய்யத் தெரியும்" என்றார். ராஜாவானவர் "அஃதென்ன?" என்று வினவ, அவர் "நான் ஸிம்மத்தைப்போலக் கர்ஜிப்பேன்" என்று பதிலுரைத்தார். ராஜா ஆசையுடன் அவ்வாறே செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

உடனே வாஜபேயர் "மகாராஜாவே, அப்படி நான் செய்யவேண்டுமென்றால் மத கஜங்கள்கூட எட்டுமைல் எல்லைக்குள் இருக்கக்கூடாது. சிசுக்களும் பயந்தஸ்திரீகளும்கூட இருக்கக்கூடாது." என்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே ராஜாவும் ஆணையிட்டு விட்டார். திரள் திரளாகப் புருஷர்கள் இந்த வேடிக்கையைப் பார்க்கத் தஞ்சை வந்து சேர்ந்தனர். வாஜபேயரும் மகாராஜாவும் பரிவாரங்களும் கீழை அகழிக்குச்சென்றார்கள்.

வாஜபேயர் அப்பொழுது சொன்னதாவது "மகாராஜாவே, நான் செய்வது மாயவித்தை அன்று. நான் நரஸிம்மமூர்த்தியைத் தியானம் செய்து இவ்வரத்தைப் பெற்றவன். ஆகையால் நான் ஸிம்மநாதம் செய்தவுடன் மகாகோபத்துடனும் வீராவேசத்துடனும் விளங்குவேன். அப்பொழுது பக்கத்தில் அந்தணர் நின்று லக்ஷ்மிஸ்தோத்ரம் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் என் ஆவேச மடங்கும்" என்று கூறிவிட்டு அகழ் மத்தியில் இறங்கினார்.

உடனே ஸ்ரீமந்நாராயணஸ்தோத்திரம் செய்துவிட்டுப் பெரும் ஆண் சிங்கத்தைப்போல ஒருகர்ஜனை செய்தார். பலரும் கோடையிடி இடித்ததோ என அலறி விழுந்தனர். நாடு நகரமெங்கும் எட்டு மைல் தூரத்திற்குக் கதிகலங்கிப் போயின. ஊரிலேயே பரீக்ஷைக்காக வைத்திருந்த பட்டத்து யானை வீறிட்டது. மகாராஜாவும் பக்கத்திலிருந்த ஜனங்களும் மதிமயங்கி விழுந்தனர். உடனே அங்கிருந்த அந்தணர் லக்ஷ்மிஸ்தோத்ரம்செய்ய ஆரம்பித்தனர். ஆவேசம் மெள்ள மெள்ளத் தணிந்தது. சாந்தம் மேலிட்டது. அப்பொழுது பதினாயிரம் பிராம



ணர்களுக்குப் பானகபூஜையும் வேறு சிறந்த உபசாரங்களும் நடைபெற்றன.

இவற்றையெல்லாம் பார்த்த மகாராஜா "பிராமண சிரேஷ்டரே, தமக்கு யாதுவேண்டுமோகேளுங்கள். நான் கொடுக்கச்சித்தமாய் இருக்கிறேன்." என்று கூறினார். அப்பொழுது வாஜபேயர் "மகாராஜாவே, எனக்கு வாஸம் செய்ய ஒரு கிராமம் வேண்டும். அது காவேரிதீரத்தில் இரண்டுபக்கமும் மயானமுள்ளதாகவும், சிவக்ஷேத்திரமாகவும் இருக்கவேண்டும்" என்றார். கோடீசுவர க்ஷேத்ரமான கொட்டையூரே அந்த இலக்கணங்கள் அமையப் பெற்றிருந்ததனால் வாஜபேயருக்கு அது வழங்கப்பட்டது.

மகாராஜா 36 வேலி ஸர்வமானியநிலமும் (அவருக்குப் பொருட்குறை இல்லாதிருக்கும்படி) விடுத்தார். இன்னும் கொட்டையூரில் அவருடைய வமிசத்தார் வாஸம் செய்வதாகத் தெரியவருகிறது.

---

# அத்தியாயம் 17.

## சில தெருக்களின் சரித்திரம்.

முன் அத்தியாயங்களிலிருந்து காமாக்ஷிஜோசியன் தெரு, அய்யன் தெரு முதலிய சிலதெருக்களின் ஆரம்பம் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். மற்றும்சில தெருக்கள் எப்படி உண்டாயின? என்பதை இப்பொழுது சொல்வோம்.

பாட்டாசாரியார் தெரு:—

இத்தெரு முந்நூறு வருஷங்களுக்கு முன் "கந்தாடைபாட்டாசாரியார்தெரு" எனவழங்கப்பட்டு வந்தது. அச்யுதநாயக்கரின் காலத்தில் அய்யா குமாரதாததேசிகர் என்பவர் இங்கு வந்தார். தேசிகர் அச்யுதநாயக்கரின் குரு எனத்தெரியவருகிறது. தேசிகரையே பின்னர் பாட்டாசாரியார் எனவழங்குவாராயினர். அவருடைய சந்ததியார் அத்தெருவிலேயே இன்றும் வசித்து வருகின்றனர்.

டபீர்தெருக்கள்:— இவை டபீர்பண்டிதர் என்னும் ஒரு மகாராஷ்டிரப்பிரபுவால் கட்டுவித்துத்தானம் செய்யப்பட்டவை. இவர் வம்சத்தில் தோன்றியவர்தாம் காலம் சென்ற கோபால்ராவ் என்னும் ஆங்கிலபாஷையில் ஒப்பற்ற பண்டிதர். டபீர் ராயர், தஞ்சாவூரில் துளஜா மகாராஜாவின் மந்திரியாய் இருந்தவர். அவர் தஞ்சாவூர் ராஜ்யம்முழுதையும் ஸர்வேசெய்து நிலத்தீர்வையொன்று போட்டார். அதை "டபீர் முறி" என்று இன்றும்சொல்லுவர். சங்கராசார்யசுவாமிகள் இவ்வூரில் எழுந்தருளியிருக்க டபீர்பண்டிதர் வேண்டியஉதவிபுரிந்தவர்.

பச்சையப்ப முதலித்தெரு:—

இதைக்கட்டித்தானம் செய்தவர் பச்சையப்பமுதலியார் என்னும் பிரபு. இவருடைய சரித்திரம் மிகவும் ஆச்சர்யத்தைத் தரக்கூடியது. இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவருடைய தந்தை இவர் பிறந்த சிலமாதங்களுக்கெல்லாம் இறந்து போனார். இவருக்கு ஐந் வருஷம் முடியுமுன்னமே இவர்தாய் இவருடன் சென் வந்து சேர்ந்தாள். அப்பொழுதுதான் ஆங்கிலேயர் இ



யாவுக்கு வந்த ஆரம்பகாலம். அவர்களிடம் போணி நாராயணபிள்ளை என்றொரு தரகு வியாபாரி இருந்தார். அவர் பச்சையப்பரை ஆதரிக்க ஒத்துக்கொண்டார்.

அவ்வாறே அவர் பச்சையப்பருக்கு இங்கிலீஷ் முதலிய பாஷைகளைக் கற்றுக்கொடுத்தார். பிறகு பச்சையப்பரே ஒரு வர்த்தகனிடம் காரியஸ்தராக அமர்ந்தார். அவருடைய நாணயத்தையும் சாமர்த்தியத்தையும் கண்டு ஆங்கிலேயர் அவரைத்தம் காரியஸ்தராக்கிக்கொண்டார். ஆங்கிலேயர் மகமதியருடன் அக்காலத்தில் சண்டைபோட்டபோது அவர்களுக்குப் போருக்குவேண்டிய சாமான்களைத் தட்டில்லாமல், பச்சையப்பர் வாங்கிக் கொடுத்துவந்தார். ஆகையால் ஆங்கிலேயருக்கு அவர் மேல் வெகு அபிமானம் வந்துவிட்டது.

இச்சமயம் தஞ்சாவூர் ராஜாவுக்கும் ஆங்கிலேயருக்கும் மனவருத்தம் நேரிட, இருவரும் பச்சையப்பமுதலியாரை மத்தியஸ்தம் செய்யும்படியாக வேண்டிக்கொண்டனர். அப்பொழுது பச்சையப்பர் தஞ்சாவூர் திவான் வேலையைப் பார்த்துவரும்படியாக நேர்ந்தது. அந்தத் திவான் வேலையிலிருந்து எல்லோரையும் மகிழ்வித்தார்.

இம்மாதிரி அவர் இருந்தமையால் ஏராளமான திரவியம் சம்பாதித்தார். இவ்வளவு செல்வமிருந்தும் அவருக்குப் புத்திரப்பேறில்லை. ஒரு புதல்விமட்டும் இவருடைய இரண்டாம் மனைவிக்குப்பிறந்தனள். இதைக் கண்ட பச்சையப்பர் "ஆஹா நமக்குப்புத்திரசந்தானம் ஏற்படக் கடவுளுக்குத் திருவுள்ளமில்லை. பாடுபட்டுத் தேடிய இப்பொருளை நாம் என்னசெய்யப்போகிறோம். அக்கடவுளின் பொருட்டே நம் சொத்துக்களை நாம் செலவழிப்போம்" என்று மனத்தில்உறுதிசெய்துகொண்டார்.

ஆகையால் இவர், தம் இறுதிக்காலத்தில் நமது திருக்குடமூக்கிலேயே மரணசாசனமொன்றை எழுதுவித்தார். அதில் தம் சொத்துக்களில் பெரும்பாகத்தைச் சைவக் கோயில்களுக்கும், வைஷ்ணவ கோயில்களுக்கும் திருப்பணி முதலிய கைங்கர்யங்களுக்கு எழுதிவைத்து விட்டார். பிறகு மரணகாலத்தில் காசிக்குச் சமமான க்ஷேத்திரமாகிய திருவையாற்றுக்குச் சென்று சிவலோகப் பிராப்தியடைந்தார். அவர் இறந்து சரியாக 130-வருஷங்களாகின்றன. ஆனால் அவர் புகழ் எக்காலத்தும் இறவாது.

அவர்தாம் நம்மூரில் தம்பெயர்கொண்ட குளத்தை வெட்டுவித்துத் தெருவையும் கட்டுவித்துத் தானம்செய்தவர். அவர் தர்மசொத்தினின்றும்தான் சென்னையிலிருக்கும் பச்சையப்பன் காலேஜ் கட்டப்பட்டுச் சிறப்பாக நடந்து வருகிறது. சிதம்பரத்திலும், காஞ்சீபுரத்திலும் அவருடைய பெயரால் ஹைஸ்கூல்கள் ஏற்படுத்தப்பட்டு நன்கு நடைபெற்று வருகின்றன.

ரெட்டிராயர் அக்கிரஹாரமும் குளமும்:—

இவ்விரண்டும் ரெட்டிராயர் என்பவரால் நூறுவருஷங்களுக்கு முன் உண்டாக்கப்பட்டவை. இவர் அக்காலத்தில் திருவனந்தபுர ஸமஸ்தானத்தில் திவான் உத்யோகம் பார்த்தவர். அதில் ஏராளமான திரவியம் சம்பாதித்தார். இளமையில் அவர் வெகு ஏழையாய் இருந்தமையால் அவருக்கு ஏழைகளின் கஷ்டம் தெரியும். ஆகையால் தம் பொருளின் பெரும்பாகத்தையும் தர்மத்திற்கே எழுதிவைத்து விட்டார். தென்னாட்டிலும் மலையாளத்திலும் அவர் பல சத்திரங்கள் கட்டி அன்னதானம் செய்



திருக்கிறார். இன்றைக்கும் அவருடைய சத்திரம் நமது ஊரில் அவர்கட்டிய தெருவிலேயே நடந்துவருகிறது. அவருடைய குளம் சீர்திருத்தப்பட்டு மிகவும்பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வெங்கடராயர் தெருவும் சத்திரமும்:—

இத்தெரு வேங்கடராயர் என்னும் மற்றொருபிரபுவால் கட்டித்தானம் செய்யப்பட்டது. இவரும் திருவனந்தபுரம் திவானாயிருந்தவர். வேங்கடராயரும் ரெட்டிராயரும் ஏககாலத்திலிருந்தவர்கள். ரெட்டிராயருக்குப் பிறகு வேங்கடராயர் திவான் வேலைபார்த்தார். அவர் மீது ஆங்கிலேயருக்கு வெகு அபிமானம். அவருடைய புத்திரர்தாம் திவான்பஹதூர் ரகுநாதராயர் என்பவர். அவர் இந்தூர்திவானாகச்சென்று அந்நாட்டைமுன்னேற்றமடையச்செய்தார். கும்பகோணத்தில் முற்காலத்தில் திவான்பஹதூர் என்றால் அவரைத்தான் குறிக்கும்.

நமது ஊரில் வேறு பல தெருக்களுக்கும் இதேமாதிரி சரித்திரமிருக்கிறது. அதை நீங்கள் முதியோரைக் கேட்டால் தெரிந்துகொள்ளலாம்.

---

## அத்தியாயம் 18.

### நமது ஊர் எப்பொழுது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்வந்தது

நமது ஊர் ஆயிரம் வருஷங்களுக்கு முன் சோழர்களிடம், முந்நூறுவருஷங்களுக்குமுன் நாயக்க அரசாளும்

ஆளப்பட்டுவந்தது என்பது உங்களுக்குத்தெரியும். நாயக்க மன்னர்களில் கடைசியிலிருந்தவர் பெயர் செங்கமலதாஸ். அவர் பட்டத்திற்குவந்ததுமுதல் எங்குப் பார்த்தாலும்சண்டைசச்சரவுகள் மிக்கன. ஊர் இரண்டுபட்டால்கூத்தாடிக்கு எளிதன்றோ? அச்சமயம் மராட்டியர் வெகு தந்திரமாகத் தஞ்சாவூர் ராஜ்ஜியத்தைப் பிடித்துக்கொண்டனர். பிறகு மராட்டிய மன்னரே தஞ்சையை ஆண்டுவந்தார்கள்.

இந்த மராட்டியருக்கும் மகமதியருக்கும் பெரும் சச்சரவுகள்நேர்ந்தன. ஆகலின் மகமதியர் பலதடவையும் கூட்டம் கூட்டமாக வந்து நமதுஜில்லாவைக் கொள்ளையடித்துப்போவது வழக்கமாயிற்று. அந்த மகமதிய அரசருள் ஹைதர்அலிஎன்பவன் மிக்ககுரூரமும் பலமும் பொருந்தியவன் என்று கூறுகின்றனர். அவன் மைசூர் நாட்டரசன். அவனுக்கும் ஆங்கிலேயருக்கும் எப்பொழுதும் சண்டையே. அவன் அவர்களை எதிர்ப்பதற்காக நமது ஜில்லாவழியாகச்சென்றான். அவன் சென்றவிடத்திலெல்லாம் நெருப்பு வைப்பதும் கொள்ளையடிப்பதும் கொலைசெய்வதுமாகவே இருந்தான். நமது தாலூக்காவையும் சீர்காழி தாலூக்காவையும் அவன்படுத்தியபாடு அளவிடமுடியாதது. மாசூல்களைக்கெடுத்தான். பயிர்களை அழித்தான். ஜனங்களெல்லோரும் காடுகளிலும் புதர்களிலும்போய் ஒளித்தனர். ஸ்திரீகளும் குழந்தைகளும் பிழைப்பதே அரிதாயிற்று. ஆள் அரவம் கேட்டால் பாய்ந்துவிடுவர் மகமதியர். இம்மாதிரி பலரும்தவித்ததையே இன்றும் ஹைதர்கலாபம் என்பர்.

இவன் நமது ஊரிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லத் தஞ்சாவூர் மராட்டிய அரசன் நான்கு லக்ஷம் ரூபாய்



லஞ்சம் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான். இதைக் கேட்டதும் ஆங்கிலேயர் "நமக்குச்சத்துருவானஹைதருடன் இவ்வரசன் சண்டைபோடாமல் எப்படிச்சமாதானம் செய்துகொள்ளலாம்" என்று கோபம் கொண்டார்கள். இந்த மனவருத்தத்தைத் தீர்ப்பதற்குத்தான் பச்சையப்பர் அனுப்பப்பட்டார். சரியாக 125 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் ராஜாவாயிருந்த சரபோஜிக்கும் ஆங்கிலேயருக்கும் ஒருடன்படிக்கை ஏற்பட்டது.

சரபோஜியோ இளைஞன். ஆதலின் ராஜ்ஜிய நிர்வாகத்தை ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். சரபோஜிக்குத் தஞ்சாவூரையும் அதைச்சுற்றியுமுள்ள சிலகிராமங்களையும் சொந்தச்செலவிற்காக விட்டனர். அந்த வருஷத்திலிருந்துதான் நமது ஊரும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது.

---

## அத்தியாயம் 19.

### நமது ஊரிலுள்ள கச்சேரிகளும் வேறு கட்டிடங்களும்.

தஞ்சாவூர் சரபோஜியின் நேர் ஆளுகையின் கீழிருந்ததால் ஆங்கிலேயர் கும்பகோணத்தையே இந்த ஜில்லாவின் தலைநகரமாக்கிக் கொண்டார்கள். இம் மராட்டிய மன்னர் பரம்பரை தஞ்சாவூரில் ஓயும்வரை ஜில்லாக்கச்சேரிகள் எல்லாம் நமது ஊரில் இருந்தன. தற்காலத்தில் நமது ஊரில் நான்குபெரும் கச்சேரிகள் இருக்கின்றன; அவைகள் முறையே ஸப்கோர்ட்டு, ஸ்மால்காஸ்கோர்ட்டு, இரண்டு முன்ஸிப் கோர்ட்டுகளுமாம். இவைகளைத் தவிர இவ்வூரில் டெப்யுடி கலெக்டரும், தாசில்தாரும் ஸப்யாஜிஸ்டிரேட்டும் இருக்கிறார்கள்,

**கவர்மெண்ட் காலேஜ்.**

இந்தக்காலேஜ் ஏற்பட்டுச் சுமார் 70-வருஷங்கள் ஆகின்றன. ஆதியில் இது ஹைஸ்கூலாகவே இருந்தது. இதுஏற்பட்ட எட்டு வருஷங்களுக்கெல்லாம் போர்ட்டர் என்னும் ஒரு துரை இதற்குத்தலைமையதிகாரியாக வந்தார். அவர் இந்த ஹைஸ்கூலை காலேஜாக மாற்றினார். அக்காலத்தில் காலேஜானது ஒரு கூரைக்கட்டில் இருந்தது. பிறகுகவர்மெண்டார் 40000-ரூபாய் செலவிட்டு ஒருசுண்ணாம்புக் கட்டிடத்தைக்கட்டினார்கள். அதிலிருந்து மேன்மேலும் விருத்தி செய்யப்பட்டவைதாம் தற்காலத்திய அழகிய கட்டிடங்கள். நாற்பது வருஷங்களுக்குமுன்னேயே ஹைஸ்கூல் இலாகாவை எடுத்துவிட்டுக் காலேஜ் இலாகாவை மட்டும் வைத்துக்கொண்டனர்.

இந்தக் காலேஜ் தென்னிந்தியாவிலேயே மிகப்பிரசித்திப் பெற்றது. இதில் வாசித்த பலரும் பல பெரும் உத்தியோகங்களில் அமர்ந்து அரும் புகழ்பெற்றனர். இங்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட கல்வி தென்னிந்தியாவிலேயே சிறந்ததாக இருந்தது. ஆகையால் ஆங்கிலேயரே இதைத்தங்கள் தேசத்தில் சிறந்தகல்விகற்றுக்கொடுக்கப்படும்கேம்பிரிட்ஜ் என்னும் நகரைப்போன்றது எனக் கூறினர். ஆதலின் நமது ஊருக்குத் தென்னிந்தியா கேம்பிரிட்ஜ் என்றொரு புனைபெயரும் உண்டு.

**போர்ட்டர் டவுன்ஹால்.**

இது போர்ட்டர்துரையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. ஏனெனில் போர்ட்டர்துரை மிக்க கியாதி பெற்றவர். அவர் கணிதசாஸ்திரத்தில் நிபுணர். தம் மாணாக்கர்களிடம் மிக்க அன்புவாய்ந்தவர். எந்தப்பையன் எச்சமயத்தில் சென்றாலும் சலித்துக்கொள்ளாமல் அவனுடைய சந்தேகங்களைத் தீர்த்தனுப்புவார். ஏழைப்பையனானால் அவனுக்கு இனாமாகவே கல்விகற்றுக்கொடுத்து முன்னுக்குக் கொண்டுவந்துவிடுவர். அவனுக்கு உத்தியோகம் செய்துகொடுப்பதைக்கூடத் தம் பொறுப்பாகவே அவர் மதித்துவந்தனர். அவருடைய ஞாபகார்த்தமாக இந்த ஹாலைக்கட்டியது நியாயமல்லவா?



**கோபாலராவ் புஸ்தகாலயம்.**

இது போர்ட்டருடன் துணைவராக இந்தக்காலேஜில் இருந்த கோபாலராயர் என்பவரின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. கோபாலராயர் டபீர் பண்டிதரின் வம்சத்தில் உதித்தவர். அவர் ஆங்கிலபாஷையில் சிறந்த வித்வான். அவரது சொல்லிக்கொடுக்குந் திறமையை எல்லோரும் புகழ்வார்கள். அவர் ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தித்தான் பேசுவாராம். அவரிடம் மாணாக்கர்களனைவருக்கும் ஒருவிதபயம். அவர் பன்முறை இந்தக் காலேஜில் தலைமையதிகாரி (பிரின்ஸிபால்) உத்தியோகத்தை வகித்துநடத்திவந்தார். அவருடைய கல்வித்திறமைக்காக அரசாங்கத்தார் அவருக்கு "ராவ்பஹதூர்" என்னும் பட்டத்தையளித்தனர்.

இந்தப் புஸ்தகாலயத்தில் ஆங்கிலபுஸ்தகங்கள் மட்டு இருக்கின்றன. அங்கே சென்று மாலையில் எல்லோரும் இப்புஸ்தகங்களை இனாமாக வாசித்து விட்டு வரலாம்.

**சாது சேஷய்யா புஸ்தகாலயம்.**

சாது சேஷய்யாஎன்பவரும் இவ்வூர்க்காலேஜில் 30 வருஷங்களுக்குமுன் தலைமையதிகாரி உத்தியோகம் பார்த்தவர். இவரும் ஆங்கிலபாஷா போதகர். இவர்

செங்கற்பட்டு ஜில்லாவில் 'ஸாது' என்னும் ஊரில் பிறந்தவர். ஆனால் உண்மையிலும் இவர் ஸாது. இவருடைய குணத்தைக்கண்டு மெச்சாதவர் இலர். அவரைக்கண்டாலோ எல்லோருக்கும் ஒரு பக்தியும் விசுவாஸமும் உண்டு. ஆங்கிலேயர்கூட அவரிடம் வெகு வினயத்துடன் நடந்துகொள்ளுவர். ஏழைப் பையன்களுக்கு அவர் தம் கையிலிருந்து பணத்தைக்கொடுப்பார். புஸ்தகங்களை வாங்கிக்கொடுப்பர். உத்தியோகம் செய்து வைப்பர். அவருக்கும் "ராவ்பஹதூர்" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

அவர் பெயர்பூண்ட புஸ்தகாலயத்தில் தமிழ், ஸம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைப்புஸ்தகங்கள் பல இருக்கின்றன. அவைகளையும் இனமாகவே மாலையில் அங்குப்போய் வாசிக்கலாம். இவ்விரண்டு புஸ்தகாலயங்களும் போட்டர் ஹாலுக் கடுத்தாற்போலிருக்கின்றன.

மௌனசுவாமிகள் மடம்.

இந்தமடம் பேட்டைத்தெருவில் இருக்கிறது. இது மௌனசுவாமிகள் என்பவரின் ஞாபகார்த்தமாகக்கட்டப்பட்டது. இவர் நாற்பதுவருஷங்களுக்குமுன் இவ்வூரில் வாசம் செய்தார். இவர் மௌனத்துறவி. ஆடையுடுப்பதில்லை. தாமாக உணவு அருந்துவதில்லை. பலவந்தம் செய்தால்தான் உண்பர். கண் எப்பொழுதும் மேல் நோக்கியதாகவேயிருக்கும். இவர் ஒரு சித்த புருஷர். பெரிய யோகி. யோகியென்றால் ஐம்புலன்களையு மடக்கிச் சித்தத்தைக் கடவுள்பாற் செலுத்தியவர். அப்பரம்பொருள் ஒன்றைத்தவிர மற்றெதிலும் அவர்களுடைய மனம் செல்லாது.



இவரை வேங்கடாசலம்பிள்ளையென்னும் ஒரு வைத்தியர் சிறப்புடனும் பக்தியுடனும் நடத்திவந்தார். இவர் மௌனசுவாமியின் கைபட்ட விபூதியை நோயாளிகளுக்குக்கொடுத்து எல்லாப் பெரும் வியாதிகளையும்தீர்த்துவந்தார். அந்த விபூதியின் மகிமையை யாராவது சொல்லவும் வேண்டுமோ? ஆதலின் அவருக்கு மடமொன்றைக் கட்டி, இன்றும் திருவிழா நடத்திவருகின்றனர்.

ஹைஸ்கூல்கள்.

இவைகளைத்தவிர நம்மூரில் 3 பெரிய ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. இவைகளில் 'ஸ்கூல் பைனல்' பரீக்ஷைக்கு மாணாக்கர்களைத் தயார்செய்து அனுப்புகிறார்கள். இவைகளில் பழைமையானவை டவுன் ஹைஸ்கூலும் நேடிவ் ஹைஸ்கூலும் ஆம். டவுன் ஹைஸ்கூல் இவ்வூர்ப் பெருமக்களின் ஆதரவின்மேல் நிறுவப்பெற்று செவ்வையுற நடத்தப்படுகிறது. நேடிவ் ஹைஸ்கூல் பெரியோர் மூவருடைய ஊக்கமிகுதியால் ஆதியில் ஏற்படுத்தப்பட்டது. அம்மூவரில் இப்பொழுதிருப்பவர் "ராவ்பஹதூர் அப்பு சாஸ்திரி" என்பவரே. இவரே சென்ற நாற்பத்தைந்து வருஷங்களுக்கு மேலாக இப்பள்ளிக்கூடத்தைப் பலவழிகளிலும் திறமையுடன் நடத்திவருகிறார். வாணாதுறை ஸ்கூல் என்பது ஹைஸ்கூலாக ஏற்பட்டுப் பத்து வருஷங்களுக்குள்ளாகிறது. என்றாலும் அதுவும் மற்றைய பள்ளிகளைப்போலவே விருத்தியாகிக்கொண்டு வருகிறது.

முனிசிபல் ஆர்ட்டு ஸ்கூல்:—

இது தற்காலத்தில் நீடு அய்யன்தெருவில் உள்ளது. இதில் சிற்பம், சித்திரவேலை, முதலிய கலைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இது ஆதியில் கவர்ன்மெண்டாரால்

நடத்தப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது இதனை முனிஸிபாலிடியாரே நடத்தி வருகின்றனர்.

வேறு பல கட்டிடங்களைப்பற்றி இங்கே கூற இடக் குறையால் முடியவில்லை. அவற்றைக்குறித்து நீங்களே முதியோரைக் கேட்டறிந்துகொள்ளுங்கள்.

---

# அத்தியாயம் 20.

## இவ்வூர் முனிஸிபாலிடி.

நமது ஊர் இப்போது ஆங்கில ஆட்சியின் கீழிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயர் பெரிய அரசாங்க விஷயங்களைத் தாமே அதிகாரிகளை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். வேறு சிறியவிஷயங்களை "முனிசிபல் கௌன்ஸில்" என்னும் சபையொன்றை ஏற்படுத்தி அவைகளை நடத்திவரும்படி உரிமைகொடுத்து நன்கு நடத்துகின்றனவா என்றும் மேல்பார்க்கின்றனர். முனிஸிபல் கௌன்ஸில் என்றால் நகரபரிபாலனசபை என்றர்த்தம்.

இந்தச் சபையின் அங்கத்தினரை (மெம்பர்களை) இந்த நகரவாசிகளே தேர்ந்தெடுக்கவேண்டும். இப்படித் தேர்ந்தெடுப்பதற்காக, ஜனங்கள் போலிங்ஆபீஸ் என்னும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று அங்கே ஒரு கடிதத்தில் தங்களுக்குவேண்டுபவரின் பெயரை வேறெவரும் காணாதபடி எழுதி, போலிங்ஆபீஸர் என்பவர்வசத்திலிருக்கும் ஒருபெட்டிக்குள் போட்டுவிட்டு வருவார்கள். இப்படி எழுதிப்போடுவதை ஓட்டுக் கொடுப்பது என வழங்குகிறோம். அதிக ஓட்டுகள் எவர்களுக்குக் கிடைக்கிறதோ



அவர்கள் இச்சபையின் அங்கத்தினர் எனக்கருதப்படுவர். இவ்வாறு தேர்ந்தெடுத்தலையே எலக்ஷன் எனக் கூறுகிறோம். (ஓட்டு = வாக்குரிமை, ஓட்டர் = வாக்காளர், எலக்ஷன் = தேர்ந்தெடுத்தல்.)

இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் சபைக்குச் சென்றதும், 'தாம் தமது நாட்டு வேந்தனுக்கு எக்காலத்திலும் தீங்கு நினைப்பதில்லை, இராஜபக்தியுடன் இருப்போம்' என்று பிரமாணம் செய்யவேண்டும். இதையே ராஜவிசுவாசப் பிரமாணம் எனச் சொல்லுவது. இப்பிரமாணம் செய்யாவிட்டால் அவர்கள் சபையின் அங்கத்தினர் ஆகமாட்டார்கள்.

நமது நகர முனிஸிபாலிடியின் எல்லையை நீங்கள் நமது நகரைச்சுற்றியிருக்கும் 'சுங்கம் கேட்டு'களிலிருந்து அறிந்துகொள்ளலாம். வடக்கே பாலக்கரையிலும், கிழக்கே திருநாராயணபுரத்திலும் (புதுடவுன்) தெற்கே சாக்கோட்டையிலும், மேற்கே காவிரியின் வடகரையிலுள்ள கொட்டையூரிலும் தென்கரையிலுள்ள தாராசுரத்திலும் சுங்கங்கேட்டுகள் இருக்கின்றன. ஆனால் தாராசுரம் முனிசிபல் எல்லைக்கு உட்பட்டதன்று.

முனிஸிபாலிடியார்தாம் தெருக்களைச்சீர்செய்வதும், எங்கும் விளக்குப்போடுவது, குப்பை முதலியவற்றைக் கூட்டச் சொல்லுவது, முதலியவற்றைச் செய்விப்பர். இவை அவர்களுடைய சிறுவேலைகள். பெரியதாக, அவர்கள் தாம் பெரிய வைத்திய சாலையையும், மற்றொரு கிளை வைத்தியசாலையையும் வைத்திருக்கிறார்கள். பெரிய ஆஸ்பத்திரி கிழக்கே முனிஸிபல் ஆபீஸின் அருகாமையிலேயே இருக்கிறது. கிளை ஆஸ்பத்திரி கும்பேசர் கோயில்

தெற்கு வீதியில் இருக்கிறது. இவ்விரண்டினுடைய செலவின் பெரும்பாகத்தையும் முனிஸிபாலிடியாரே கொடுத்து வருகிறார்கள்.

இவையெல்லாவற்றிற்கும் மேம்பட்டதொரு நன்மையை முனிஸிபாலிடியார் கவர்ன்மெண்டின் பிரேரணையின் மீது நகரத்திற்கே செய்திருக்கிறார்கள். இது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கவேண்டும். இது கட்டாய இலவசக்கல்வி.

மனிதராய்ப் பிறந்தோர்க்குக் கல்வியில்லாவிடில் அதைவிட வேறு இழிவில்லை. இதுவே நாலடியாரில் பின்வருமாறு கூறப்படுகிறது.

குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்ல—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வியழகே அழகு.

இதற்காகவே

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

என்றும் கூறியிருக்கின்றனர். ஆதலின் கல்வி கட்டாயமாக எல்லோராலும் கற்றுக்கொள்ளப்படல் வேண்டுமென்பது தெளிவாகும்.

அவ்வாறு கற்பதற்குக்குழந்தைப் பருவமே சிறந்தது.

"இளமையிற்கல்"

என்பது உங்களுக்கெல்லாம் தெரியுமல்லவா. மூங்கில் வளைக்கவேண்டுமென்றால் இளமையில் தானே வளைக்க வேண்டும். இதை அனேகமாய் எல்லோரும் அறிந்



ருந்தபோதிலும் பல பெற்றோர்கள் தங்கள்குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புவதில்லை. காரணத்தை விசாரித்தால் பள்ளிக் கூடச் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். ஆகையால்தான் பள்ளிக் கூடச் சம்பளமில்லாமல் ஆரம்பக் கல்வியைக் கட்டாயப் படுத்தி இலவசமாகவும் முனிஸிபாலிடி எல்லைக்குள் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மென்டாரின் பெரும் முயற்சிகளின் பேரில் சென்ற இரண்டு வருஷ காலமாக நமது நகர பரிபாலன சபை நிச்சயித்துச் செய்து வருகிறது.

இக்கட்டாய இலவச ஆரம்பக் கல்வியின் அவசியத்தையும், நடத்தும் வழியையும் முதன் முதல் நமது நாட்டில் எடுத்துக் கூறியவர் காலம் சென்ற ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே என்னும் தேசாபிமானியே. ஆதலின் நமது நாடு இக்கல்வியில் முன்னேற்ற மடைவதால் உளதாகும் புகழ் கோகலேக்கே உரித்தானது. நகரபரிபாலன சபையார் செய்விக்கும் எந்தக் காரியமும் நகரவாஸிகள் கொடுத்த வரிப்பணத்தைக் கொண்டேயாகும். ஆதலால், குறைகளைக் கண்டால் தைரியமாகத் தலைவரிடம் கூறி நிறைவாக்கிக் கொள்ளலாம். நம்மூர் முனிஸிபாலிடி ஏற்பட்டுச்சுமார் 60 வருஷங்கள் ஆகின்றன.

இவைநிற்க, ஆயிரம்வருஷங்களுக்கு முன்னரே நமதூரில் ஒரு நகரபரிபாலன சபை இருந்ததாகத் தெரியவருகிறது. இதற்குச் சாக்ஷியாக நாகேசுவர சுவாமிகோயிலின் ...ற்குப்பிரகாரத்தில் ஒருகல்வெட்டுச்சாசனமிருக்கிறது. ...ன் சாராம்சத்தை மட்டும் இங்குப் பார்ப்போம்.

ஆயிரம் வருஷங்களுக்கு முன் பராந்தகன் என்னும் ...மாராஜன் பாண்டிய நாட்டை வெல்ல மும்முறை

படையெடுத்துச் சென்றான். அந்தச் சண்டைச் செலவிற்காகக் குடமூக்குச் சபையை மூவாயிரம் கழஞ்சுகள்† (சுமார் 3750 பவுன்) தண்டம் கொடுக்கவேண்டுமென்று விதித்தான். இத்தொகையைக் கொடுப்பதற்காகக் குடமூக்குச்சபை திருக்கீழ்க்கோட்டத்துப்பரமஸ்வாமிக்கு அரிசலூர் நிலத்தை 500 கழஞ்சுக்கு விற்றது.

இதிலிருந்து இரண்டு விஷயங்களை நாம் ஊகித்தறியலாம். முதலாவது திருக்குடமூக்குச் சபையொன்றிருந்தது. இரண்டாவது (அது 3750 பவுன் தண்டம்சமர்ப்பிக்கவேண்டுமென்பதால்) மிகவும் பொருட்செல்வமுடையதாகவும் இருந்திருக்கவேண்டும் என்பது.

இனி இப்பழைய சபை எப்படிக் கூட்டப்பட்டது, என்பதையும் எவ்வெவ்வேலையைச் செய்தது என்பதையும் பார்ப்போம். இதை விவரமாக மேற்கூறிய பராந்தக சோழனே மற்றோரூர்ச்* சாசனத்தில் எழுதியிருக்கிறான்.

இச்சபையின் அங்கத்தினர் ஆக விரும்புவோர் பின்வரும் நிபந்தனைக் குட்பட்டிருக்கவேண்டும்.

(1) அவருக்குக் குறைந்தது கால்வேலி நிலமும் அவ்வூரிலேயே ஒரு வீடும் இருக்கவேண்டும்.

(2) அவருடைய வயது 35-க்கு மேல் 70-க்குள் இருக்கவேண்டும்.

---

† கழஞ்சு 140 கிரெயின் (Grain) இடையுள்ள தங்கநாணயம். நமது தற்காலத்திய பவுனோ 123 கிரெயின் இடையுள்ளது. பண்டைக்காலத்திய பொற்காசு 28 கிரெயின் கொண்டது.

* உத்தரமேரு சதுர்வேதிமங்கலம்.
Refer Epigraphist's report for 1899.



(3) வேதாகமங்கள் படித்தறிந்தவராயும், ஆசாரசீலராயும் இருக்கவேண்டும்.

(4) ஒரே குடும்பத்தாரும் உறவினரும் ஆனவர்களிற் பலரும், நல்லொழுக்கமில்லாதாரும், அங்கத்தினராக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள்.

இவர்களைத்தேர்ந்தெடுத்தல் தற்காலத்தில் நடப்பது போலவே இருந்தது. ஊரில் குறிப்பிட்ட இடங்களில் உண்டியல் குடங்கள்போல மூடியில் சிறு துவாரமுள்ள குடங்களிருக்கும். அங்கே ஊர் ஜனங்கள் சென்று தங்களுக்கு வேண்டியவரின் பெயரை ஒரு சிறு ஓலைத்துண்டில் எழுதி அதனுட்போட்டுவிட்டு வந்துவிடுவார்கள். இவ்வோலைகளைக் குடவோலை என்பர். இதுவே தற்காலத்திய ஓட்டு ஆகும்.

இவ்வோலைக்குடங்களை இரகசியமாகத் திறக்கக்கூடாது. அவைகளை ஊர்மண்டபத்திலே மகாஜனங்களின் முன்னிலையில் விருத்தரான நம்பியார் ஒருவர் திறக்கவேண்டும். இவ் ஊர் மண்டபமென்பதே முனிஸிபல் கவுன்ஸில் ஹால் போலும். அப்படித்திறந்து பலகுடங்களிலுமுள்ள ஓலைகளை ஒரு பெருங்குடத்திற் கொட்டுவார்கள். பிறகு அதை நன்றாகக் குலுக்கிவிடுவார்கள். ஒன்றுமறியாத ஒரு பாலகனை அங்கே கொண்டுவந்து விட்டு அவற்றுள் ஓர் ஓலையை எடுத்து அங்கேயேயிருக்கும் ஒரு மத்தியஸ்தனிடம் கொடுக்கச் சொல்லுவார்கள். மத்தியஸ்தன் "வாங்கும்போது அஞ்சுவிரலும் அகலவைத்து உள்ளங்கையிலே ஏற்றுக்கொள்ளுவானாகவும்" ஏனெனில் கள்ளத்தனமாக மத்தியஸ்தன் தன்கையில் வேறொரு ஓலையை ஒளித்து வைத்துக்கொண்டிருத்தலாகாது என்பதற்கே இந்தச்சாக்கிரதை.

பிறகு மத்தியஸ்தன் அவ்வோலையிலுள்ளவரின் பெயரை வாசிக்கவேண்டும். "வாசித்த அவ்வோலையை அங்குள மண்டபத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும்" ஏனெனில் ஓலையில் ஒரு பெயரிருக்க மத்தியஸ்தன் தனக்கு வேண்டியமற்றொருவன் பெயரை வாசிக்காதிருக்கும்படி இந்தச் சாக்கிரதை. அப்படி வாசிக்கப் பட்ட பெயரையுடையவரே சபையின் அங்கத்தினராகப் பொறுக்கி எடுக்கப்படுவர். இம்மாதிரி, சாதாரணமாக முப்பது பெயர் பொறுக்கி எடுக்கப் படுவர்.

பிறகு இந்த முப்பது பேரும் ஐவர் ஐவராகப் பல இலாகாக்களின் பரிபாலகராக நியமிக்கப்படுவர். இவர்களிற்சிலர் தோட்டங்களையும், சிலர் குளங்களையும், சிலர் நிலங்களையும், சிலர் தங்கம் முதலிய உலோகம், நாணயம் முதலியவைகளையும், சிலர் நியாயம் வழங்குதலையும் கவனித்து வருவர். இங்ஙனமாதலால் தற்காலத்திய முனிஸிபாலிடியைக்காட்டிலும் அக்காலச்சபையார் விரிவான அதிகாரம் உடையவர்கள் என அறிகிறோம்.

அக்காலத்திலும் நிலவரியைப் போலப் பலவரிகளுமிருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்தில்தொழில்வரிகூட இருந்தது. வரிவசூல் செய்ய உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். அவர்கள் வசூல் செய்த பணத்தைத் தினந்தோறும் நகரபண்டாரத்திற்கொண்டுபோய்ச்சேர்க்க வேண்டும். பண்டாரமென்பது கஜானாவென்று வழங்குகின்றது.

வரிவசூல் செய்பவர்கள் பண்டாரத்திற் சேர்க்காமல், தாங்களே அப்பணத்தைச் சாப்பிட்டுவிட முடியாது



இதைக் குறித்துத் திருச்சிக்கு மேற்கேயுள்ள திருப்பாராய்த்துறை என்னுமூரில் ஒரு சாசனமிருக்கிறது. ஒரதிகாரி வரிவசூல் செய்த பணத்தைத் தானே செலவு செய்துகொண்டு விட்டான். அவனை அரசாங்கத்தார் சிறைச்சாலையிற் போட்டுவிட்டார்கள். அவன் அதிலிருந்து தப்பியோடிவிட்டான். உடனே துரைத்தனத்தார் அவன் சொத்துக்களை விற்று ஈடு செய்துகொண்டனர்.

இவ்வளவு சிறப்புடன் விளங்கிய நமது ஊர், தற்காலத்தில் பலநோய்களின் இருப்பிடம் போன்றிருக்கிறது. எங்குப் பார்த்தாலும் யானைக்கால், யானைக்கை, முதலிய பலதொத்து நோய்களால் வருந்துவோரை நீங்கள் காணலாம். இதன் காரணத்தை நீங்கள் யோஜித்துப் பார்த்தீர்களா?

ஜனங்கள் சுகாதாரசாஸ்திரத்தின் கொள்கைகளை மறந்ததே இதற்கு முக்கியகாரணம். நமது பெரியோர்கள் சாஸ்திரங்களையெல்லாம் நமது சுகத்திற்காகவே எழுதி வைத்திருக்கின்றனர். அந்தச் சாஸ்திரங்களில், சுத்தமான காற்று, சுத்தமான உணவு, சுத்தமான வீடு, முதலியவை நோயற்று வாழ்வதற்கு முக்கியமானவை எனக்கூறப்படுகின்றன. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும்பழமொழி உங்களுக்குத்தெரியுமல்லவா? லக்ஷக்கணக்கான திரவியம் இருந்தபோதிலும் வயிற்று [illegible]யால் வருந்துவோனுக்குச் சுகமுண்டா? அவ்வளவு [illegible]னமான திரவியமும் நோயற்றவாழ்வுக்கு ஈடாகுமா?

நமது ஊரில் அசுத்தமான, வீடுகளும் சாக்கடை[illegible]களும் மிகுந்துவிட்டன. இவைகளினின்றும் கொசுக்கள்

நிமிஷத்திற்கு நிமிஷம் லக்ஷக்கணக்காக உற்பத்தியாகின்றன. 'கும்பகோணத்துக்கொசு' என்பது பழமொழி போலாய்விட்டது. கொசுக்களால் தான் கொத்துநோய்கள் பரவுகின்றன. இவைகள் வியாதிஸ்தன் ஒருவன் மேல் உட்கார்ந்து கடித்துவிட்டு வியாதியில்லாத மற்றொருவனையும் கடித்து அந்தக்கொத்து நோயைக்கொடுத்துவிட்டுச் செல்லுகின்றன.

இதைத்தவிர நமது சுகாதார சாஸ்திரத்தில் கண்டுள்ள வேறுசில முக்கியமான கொள்கைகளும் மறக்கப்பட்டுப் போய்விட்டன. ஆறு குளம்போன்ற நீர் நிலைகளில் அசுத்தம் செய்யலாகாது, கண்ட விடத்தில் கண்டவற்றைப் புசிக்கலாகாது, சுத்தமான இடத்தில் எச்சில் உமிழ்தலாகாது—என்பவைகளை யாராவது கவனிக்கிறீர்களா? இப்படி அசுத்தம் செய்வதால் நோய்கள் பரவுகின்றன என்பதை அறியுங்கள்.

இப்படிச் சுகாதாரநிலையை கெட்டிருப்பதற்குப் பலரும் முனிஸிபாலிடியாரை மட்டும் தூற்றுவது நியாயமன்று. அவர்கள் புதிதாக ஹெல்த் ஆபீஸர் என்பவரொருவரை நியமனம் செய்து நகரத்தின் சுகாதார நிலைமையைக் கவனித்துவரும்படி செய்திருக்கின்றனர். சாக்கடைகளை ஒழுங்காகக் கட்ட ஏற்பாடுகளும் செய்துகொண்டிருக்கின்றனர். ஆனால் இதைச் சீக்கிரம் செய்து முடிப்பது முனிஸிபாலிடியாரின் பொறுப்பு. எவ்வளவு தான் முனிஸிபாலிடியார் சிரமப்பட்டாலும் நமது வீடுகளை நாம் சரியாக வைத்துக்கொள்ளுதலும், சுத்தமான உணவை மட்டும் அருந்துதலும், வேறு சுகாதாரக்கொள்கைகளைப் பற்றி நடத்தலும் நமது பொறுப்பு என அறியுங்கள். நோய்வந்தால் தவிப்பவர் நாமே என்பதை உண



ருங்கள். ஆகலின் அதைத்தடுத்தல் நமது கடமை. ஏனெனில், நோய்வந்து தவிப்பதைவிட, நோயைவராமலே தடுப்பது என்றைக்கும் சிறந்ததன்றோ?

தமிழ் நாட்டுச் செல்வ மக்களே,

இதுவரையிற் கூறியவற்றால் பொதுவாகத் தமிழ்நாட்டிலும், சிறப்பாகச் சோழமண்டலத்திலும் நமது கும்பகோணத்திலும் நிகழ்ந்த பல நற்செய்திகளை நன்கறிந்து கொள்வீர்கள்.

பழையகாலத்து மன்னர் "மண்ணில் வாழ்தருமன்னுயிர்கட்கெலாம்—கண்ணும் ஆவியும் போன்று" செங்கோல் செலுத்தியவர். நம் முன்னோர்களும் நல்ல பழக்கவழக்கங்களை யுடையவராயிருந்தனர். காலபேதத்தால் இடைப்பட்டகாலத்தில் நல்லரசும் நல்லொழுக்கமும் கேடுண்டன. ஆங்கிலராட்சி நடக்கும் இக்காலம் உண்மையில் நற்காலமென அறியுங்கள். அரசுமுறைகளும் ஆசாரங்களும் முன்போலச் செழித்தோங்கும்படியான வழிகளை நாம் செய்துகொள்ள நம்முடைய ஆங்கில மன்னர் அன்பினாலும் அதிகாரத்தினாலும் உதவியிருக்கின்றார். ஆதலால் அவரிடத்து நாம் பேரன்பு பூண்டவர்களாய் நம் முன்னோர் பெருமைகளையறிந்து உலகத்தார் எல்லாரும் இன்பமடையும் வழிகளில் ஊக்கத்தோடு உழைப்போமாக.

கும்பகோண சரித்திரம் முற்றிற்று.

உ

## செய்யுட் பொருட் குறிப்பு

பக்கம் 7. " சேறிகொண்ட சிந்தை " என வரும் பாட்டு.

'திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் எம்முடைய கூத்தராகியகடவுள் அன்புநிறைந்த மனதிலே மிகவும் தெளிவடைந்து தித்திக்கும் சிவமாகிய வீட்டிலேயுண்டாகும் அமுதமாயிருக்கின்றார்; நெருங்கிய கூந்தலையுடைய பார்வதியை ஒருபாதியிலேகொண்டருளி, தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வணங்கும்படி நின்றருளுகின்றார்; மானையேந்திய திருக்கரத்தையுடைய அழகராயிருக்கின்றார்; மதில் சூழ்ந்த இலங்கையரசன் கலங்கும்படி கைலைமலையின் கீழுற அழுத்தி அவன்பாடிய ஸாமவேதகீதத்தைக் கேட்டு மகிழ்ந்தருளியவராயிருக்கின்றார்.

பக்கம் 8. " வாரார் கொங்கை " என வரும் பாட்டு.

"திருக்குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளியிருக்கும்கடவுள் கச்சணிந்தபார்வதியை ஒருபாகத்திற்கொண்டவர்; நீண்டசடையையுடையவர்; அந்தச்சடையில் நீர் மிக்ககங்கையையும் பிறைச்சந்திரனையும் அணிந்துகொண்டிருப்பவர். நெற்றிக்கண்ணையுடையவர்; கூர்மைபொருந்திய மழுவாயுதத்தை ஏந்தியவர்; அழகியகுளிர்ந்த இளமை வாய்ந்தவர்; கருமை மிக்க கழுத்தையும் எட்டுத் தோளையும் உடையவர்."

பக்கம் 16. "நடந்தகால்கள் நொந்தவோ" என வரும் பாட்டு.

ஞாலம்=பூமி. ஏனம்=பன்றி. இலங்கு=விளங்குகின்ற. மால்வரைச்சாரம்=பெரிய மலையைச்சார்ந்துள்ள பாலை நிலம். அறிதுயில்=அறிந்ததூக்கம்; ஞானநித்திரை.



பக்கம் 18. " ஏவியிடர்க்கடலிடைப்பட்டு " எனவரும் பாட்டு.

'காவிரி முதலான புண்ணிய நதிகள்வந்து சூழப்பெற்றதாகிய மகாமகதீர்த்தஞ் சூழ்ந்திருக்கின்ற திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்முடைய கூத்தராகிய கடவுள், இருவினையால் தூண்டப்பட்டுத் துன்பக்கடலிலே அழுந்திச் சோர்ந்து கிடக்கின்ற என்னை இந்தப்பிறவியை ஒழித்துக்கரையேற இழுத்து ஆங்குக் கூப்பிட்டு, எல்லாத்தேவர் உலகங்களையும்தாண்டி உயர்ந்த தமதுலகத்திலேயே போய்ச்சேரும்படி தம்முடைய குணவிசேஷங்களால் ஆட்கொண்டருளினார்.

பக்கம் 30. " கரியவன் புகையினும் " எனவரும் பாட்டு.

"நவக்கிரகங்களில் சனி இடபம் சிங்கம் மீனம் என்னும் இவைகளோடு மாறுபட்டாலும், ஆகாசத்தில் தூமகேது தோன்றினாலும், விரிந்த ஒளியையுடைய சுக்கிரன் தெற்குத் திக்கிலே பெயர்ந்தாலும், காற்று வீசும் குடகமலையினது உச்சியில் இடியோடு கூடிய நீருண்டமேகம் மழையை மிகப்பெய்தலால் அந்த மலையிலுண்டான பல பண்டங்களையும் வாரிக்கொண்டு வேகமாக வருகின்ற காவேரி ஜலம்."

சனிமாறுபடல், தூமகேது தோன்றல், சுக்கிரன் தெற்கிற்சேறல் முதலியவையுண்டாகும் காலத்தில் மழையில்லாமற் போவதால் உலகத்துயிர்கள் வருந்தும்.

பக்கம் 55. ' கலைக்கன்று தங்குகரத்தின் " எனவரும் பாட்டு.

கலைக்கன்று — இளமையுடையமான். கண்டாய் = ... ந்துகொள். அண்டகபாலத்து ... பாள்ன = ...

வுலகங்களுக்கும் உட்படாது வெளியே நிற்பவன். வலஞ்சுழியின் மேவிய மைந்தன் = திருவலஞ்சுழி என்னும் ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கிற வலிமையுடையோன்.

செய்யுட் குறிப்பு முற்றும்.

---

## பிழைத் திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 6 | 22 | Archaelogical | Archaeological. |
| 11 | 24 | Sewll's | Sewell's |
| 18 | 20 | கட்டபபட் | கட்டப்பட் |
| 19 | 8 | அத்தியாயம் 5 | அத்தியாயம் 6 |
| 24 | 1 | நாமுப | நாமும் |
| 24 | 7 | இதைக்கேடட | இதைக்கேட்ட |
| 24 | 19 | சுந்நிதியில் | சந்நிதியில் |
| 34 | 12 | கரிகார்சோழன் | கரிகாற்சோழன் |
| 52 | 11 | பலனுண்டாய் | பலனுண்டாய் |
| [illegible] | [illegible] | வலஞ்சுழியன் | வலஞ்சுழியின் |
| 55 | 15 | கோடூசா | கோடூச்சா |

85564